


ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

ஸ்ரீமத்

ராமாயண வினாவிடை

ஸப்த காண்டங்களும்
அஷ்ட அனுபந்தங்களும் அடங்கியது
(இரண்டு பாகங்கள்)

ஆறாம் பதிப்பு
துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல்
முதல் உதவி போதகரான
ஆ. ஸி. கஸ்தூரிரங்க ஐயர் பி. ஏ., எல். டி
அவர்கள் செய்தது.

சென்னை
ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி
மயிலாப்பூர் சென்னை 1916

MADRAS:
PRINTED BY HADDON & CO.,
AT BREMNER PRESS.

மூன்றாம் பதிப்பு முகவுரை.

இது மூன்றாம் பதிப்பு இதில் சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு காண்டத்திற்குரிய காப்புச்செய்யுள் கம்பராமாயணத்திலிருந்து எடுத்து இதில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஸுந்தர காண்ட ஸ்தோத்ரச் செய்யுள் மாத்திரம் ஸ்ரீமத் ராமலிங்கஸ்வாமிகள் செய்த திருவருட்பாவில் ஸ்ரீராமநாமதிருப்பதிகத்தி லிருந்து எடுக்கப்பட்டது. (பக்கம் 768, செய்யுள் 2), மேலும் ஒவ்வொரு காண்டத்திற்கேற்ற படத்தையும் இந்தப் பதிப்பில் சேர்த்திருக்கிறோம். இதில் 2, 7, 8, 9-ம் படங்கள் இவ்வூரில் ஒரு சித்திரம் எழுதுபவர் செய்தவேலை இவ்வளவு அழகாக அவைகளை அவர் தயார் செய்து கொடுத்ததற்காக. "நீடூழி வாழ்ந்து இவ்வாறு சித்திரங்கள் மேன்மேலும் எழுதி இவர் பரமபொருளின் கிருபைக்குப் பாத்திரமாகிச் சிறப்படையவேண்டும் என்று அவரை யார்தான் வாழ்த்தமாட்டார்கள்" இப்பதிப்பில் திருமயிலை பி. எஸ். கலாசாலையில் கேட்ட 7-கேள்விக் காகிதங்கள் விஷயத்தை இரண்டாவது அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வினாவிடையை நன்றாக வாசித்து விட்டு ஒவ்வொருவரும் இந்தக் கேள்விகளுக்கு விடை கொடுக்க முயன்று தமக்கு எவ்வளவு ஞாபகம் இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இதுவும் அல்லாமல், இங்கு காணும் பொதுக் கேள்விகளுக்குத் தக்க விடைகளை இப்புஸ்தகத்தின் பாகங்களிலிருந்து எடுத்தெழுதியும் பழகலாம். இந்தப் புஸ்தகத்தில் இன்ன பாகத்தில் இன்ன விஷயம் இருக்கின்றது, அவைகளை இவ்வாறு தொடுப்பது என்பது தெரியவ [illegible]

மேலும் இப்புஸ்தகத் தொடக்கத்தில் பெரியோர் செய்த பி[illegible] கூறும் ஏகச்லோகி ராமாயணத்தை பொருளை விளக்க, பி. எஸ். ஹைஸ்கூல் த [illegible] இ. வை. அனந்தராம ஐயர் அவர்களால் செய்யப் [illegible] பாட்டையும் பதிப்பித்திருக்கிறோம்.

நான்காம் பதிப்பு முகவுரை.

இப்பதிப்பில் சிற்சில மாறுபாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உருவம் மாறியிருப்பதோடுங்கூட ஒவ்வொரு பக்கத்திலும் அங்கங்குள்ள முக்கிய விஷயம் தலைப்பில் குறிக்கப்பட்டுள்ளது. ராமாயணத்திலிருந்து வெளியாகும் நீதிகளை முதல் அனுபந்தமாகவும், ஏகச்லோகி ராமாயணத்தை ராமாயணஸாரம் என்ற 7-ம் அனுபந்தமாகவும் வைத்திருக்கிறது. இந்த 7-ம் அனுபந்த விஷயத்தில் ஸ்ரீமான் கோடீச்வரய்யர் அவர்கள் அனுமதியின் பேரில் அவர் பாட்டனார் கவிகுஞ்சர பாரதிகள் அமைத்தருளிய ராமாயணச் சுருக்கக்கீர்த்தனை சேர்க்கப்பட்டிருக்கிறது. புதிய அனுபந்தங்கள் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை யாவன: கம்பராமாயணத்திற் காணப்படும் மாறுபாடுகள், ஸம்பாஷணைகள், ராமாயணஸாரம், ஸ்ரீராமநாமச் சிறப்பு, ஆகிய இவைகளே. புதிதாகச் சிற்சில படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

யில்; ஆணும்பெண்ணுமாய்க் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த க்ரௌஞ்சப் பறவைகளுள் ஆண் பறவையை, ஒரு வேடன் அப்பொழுது கொல்லக்கண்டார். உயிரோடிருந்த பெண்பறவை அப்பொழுது கதறத் தொடங்கியது. உடனே வால்மீகரது மனங்கரைய, வேடனை ஒரு அநுஷ்டுப் ச்லோகத்தால் சபித்தார்.

வினா 5.—இந்த ச்லோகம் எவ்வாறு வால்மீகருக்கு அநுகூலமாய் முடிந்தது? ராமாயண காவ்யமெழுதும் விஷயத்தில் வேறு என்ன நடந்தது?

விடை.—இந்தக் கோபம் நமக்கேன் வரவேண்டுமென்ற பச்சாத்தாபத்துடனிருந்த வால்மீக மஹரிஷியைப் பார்க்க ப்ரஹ்மதேவர் வந்தார். அப்பொழுது அவருக்குத் தகுந்த மரியாதை செய்து ஒரு திவ்ய ஆஸனத்தில் உட்காரவைத்துவிட்டு, அவர் முன்பு "நாம் கோபத்தால் சபித்துப் பாபத்திற் காளானோமே என்ன செய்வோம்!" என்ற துக்கத்துடன் யோசனையில் ஆழ்ந்து தன்னை மறந்து வால்மீகர் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ப்ரஹ்மதேவர் வால்மீகரது துக்கத்தையறிந்து, அந்த ச்லோகத்தில் அடங்கியிருக்கும அர்த்தத்தை வெளிப்படுத்தி ரிஷியை அந்த மாதிரியான அநேக ச்லோகங்களால் ராமாயணம் எழுதும்படி ஏவினார். 'ராமர் விஷயத்தில், நடந்த ஸங்கதிகள் யாவும் நடந்தபடி உமது மனதில் தோன்றட்டும்' என்று அநுக்ரஹித்துவிட்டு ப்ரஹ்மதேவர் மறைந்தருளினார். இதன் பின்பு, வால்மீகரிஷி நிஷ்டையில் உட்கார, ப்ரஹ்மதேவர் அநுக்ரஹப்படி ராமரது சரித்ரம் முழுவதும் நடந்தது நடந்தபடி வால்மீகரது ஞானக் கண்ணுக்குப்

புலப்பட்டது. இதை வைத்துக்கொண்டு மஹரிஷி ராமாயண காவ்யத்தை உண்டாக்கலாயினர்.

வினா 6.—இவ்வாறு மஹான்களது அநுக்ரஹத்தால் வால்மீக ரிஷியால் செய்யப்பட்ட ராமாயணம் எத்தனை பாகங்களையுடையது?

விடை.—ராமாயணம் ஏழுபாகங்களை உடையது. ஒவ்வொருபாகத்திற்கும் காண்டம் என்று பெயர்.

வினா. 7.—அக்காண்டங்களுக்கு முறையே என்னென்ன பெயர்?

விடை.—அவைகளின் பெயர் முறையே பாலகாண்டம், அயோத்யாகாண்டம், ஆரண்யகாண்டம் கிஷ்கிந்தா காண்டம், ஸுந்தரகாண்டம், யுத்தகாண்டம் உத்தர காண்டம் ஆகிய இவைகளே.

வினா 8.—இவற்றுள் பாலகாண்டத்தில் அடங்கிய கதை என்ன?

விடை.—அயோத்யா நகராதிபராகிய தசரதர் புத்ரகாமேஷ்டி யாகம் செய்ய, அதன் பலனாக மஹாவிஷ்ணு தம் அம்சங்களால் அவருக்கு ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்நர்களாகிய நான்கு பிள்ளைகளாக அவதரித்தது, ராமர் பால்ய பருவத்தில் விச்வாமித்ரருடன் சென்று வில்வித்தை பயின்று, தாடகையை ஸம்ஹரித்துப் பின்பு விச்வாமித்ரரது யாகத்தை ரக்ஷித்ததும், அங்கிருந்து விச்வாமித்ரரோடு மிதிலாநகரம் சென்று சிவதநுசை ஒடித்து ஸீதாதேவியைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டதும், திரும்பி அயோத்யைக்கு வருங்கால், ராமர், தம்மை எதிர்த்துவந்த பரசுராமரது கர்-

யத்தை அடக்கி, பின்பு அயோத்யை சென்று ஸுகமாயிருந்ததுமே இக்காண்டத்திலடங்கிய கதையாம்.

வினு 9.—அயோத்யா காண்டக் கதை என்ன?

விடை.—பரதசத்ருக்நர்கள் தமது அம்மான் ராஜ்யம் போயிருக்கையில், தசரதர் ராமருக்குப் பட்டாபிஷேகம் செய்ய எண்ணியதும், அதைக் கூனியின் துர்ப்போதனையால் கைகேயி தடுத்து, ராமர் 14-வருஷம் காட்டிற்குப்போக, பரதனே ராஜ்யம் ஆளவேண்டுமென்று ஏற்பாடுசெய்ததும், அதன்படியே ராமர், ஸீதை, லக்ஷ்மணர் இவர்களோடு காட்டிற்குச் சென்றதும், ராமரது பிரிவையாற்றாது தசரதர் இறந்ததும், ராமர் போகும்போது குஹனை ஸந்தித்துக் கங்கையைக் கடந்து, பரத்வாஜரை ஸந்திக்க, அவரது வார்த்தைப்படி சித்ரகூடமலையில்சென்று வாஸம் செய்ததும், பரதன், தன் அம்மான் வீட்டிலிருந்துவந்து தசரதருக்குச் செய்யவேண்டிய ஈமக்கடனைச் செய்ததும், கைகேயியைக் கடிந்துகொண்டு, அயோத்யா நகரவாஸிகள் எல்லாரோடும் பரதன், ராமரைச் சித்ரகூடத்தில் ஸந்தித்து, தகப்பனார் இறந்ததைச் சொல்லி, ராமரை ராஜ்யமாள அழைத்ததும், ராமர் தம்மால் வரமுடியாதென்று தமது பாதுகைகளைக் கொடுத்ததும், பரதன் ரிஷி வேஷம் பூண்டு பாதுகைகளுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து, நந்திகிராமத்திலிருந்து ராஜ்யமாண்டதும், அதன் பின்பு ராமர் அத்ரிரிஷி ஆச்ரமத்தில் சிறிது தங்கிவிட்டு, தண்டகாரண்ய ப்ரவேசம் செய்ததுமே இக்காண்டத்தின் கதை.

வினு 10.—ஆரண்ய காண்டத்திலடங்கிய கதை என்ன?

விடை.—விராதன் என்ற அஸுரனை ராமர் கொன்றதும், சரபங்கர், ராமருக்குத் தமது கர்மங்களையும் பலன்களையும் அர்ப்பணம் செய்துவிட்டுப் பிறப்பு நீங்கியதும், பின்பு, ராமர் அகஸ்த்யரது உத்தரவின்படி பஞ்சவடியில் வாஸம் செய்யப்போகையில், தசரதரது நேசனாகிய ஜடாயுவென்ற கழுகைக் கண்டதும், பஞ்சவடியில் ராவணனது தங்கையாகிய சூர்ப்பணகையை அவமானம் செய்ய, அவளுக்கு ஸஹாயமாக வந்த கரதூஷணுதிகளை ராமர் கொன்றதும, இதைக் கேள்வியுற்ற ராவணன், முதலில் மாரீசனைப் பொன்மானுகச் சென்று ஸீதையை விட்டு ராமலக்ஷ்மணர்களைப் பிரியும்படி செய்ததும், பின்பு தான் ஸந்யாஸி வேஷத்துடன் வந்து, ஸீதையை லங்கைக்குத் தூக்கிச் சென்றதும், ஸீதையைக் காணுது தபித்துக்கொண்டு வந்த ராமலக்ஷ்மணர்களுக்கு, ராவணனுல் அடிபட்டுக் கீழே விழுந்திருந்த ஜடாயு, ஸீதை போன விடத்தைச் சொல்லி இறந்ததும், பின்பு இவர்கள் கபந்தனைக் கொன்றதும், அவனிடமிருந்து, அருகிலிருந்த மலையிலிருக்கும் ஸுக்ரீவன், ஸீதையை மீட்டுவர ஸஹாயம் செய்வான் என்றறிந்து, ராமர் அம்மலையருகில்வருங்கால் சபரியைக் கண்டு அவளுக்கு மோக்ஷம் கொடுத்ததும, பின்பு பம்பாஸரஸின் கரைசென்றதும் இக்காண்டத்தின் கதை.

வினு 11.—கிஷ்கிந்தா காண்டக் கதை என்ன?

விடை.—ராமர் ரிச்யமூகமலையையடைந்து ஸுக்ரீவனேடு அக்நிஸாக்ஷியாக ஸ்நேகஞ்செய்துகொண்டு

ஸீதையைத் தனக்கு மீட்டுத்தரவேண்டு மென்பதாகவும், அதற்குப் பதிலாகத் தாம் முன்னதாகவே ஸுக்ரீவனது தமையனான வாலியைக் கொன்று அவனுக்கு ராஜ்ய முதலியவைகளை மீட்டுக் கொடுப்பதாகவும், இருவரும் ஒரு ஏற்பாடு செய்துகொண்டதும், அதன்படி ராமர் வாலியை மறைந்து கொன்றதும், அப்பொழுது கார்காலம் வந்தமையால் ஸுக்ரீவனை ஸுகமாய்க் கார்காலம் முடியும்வரையில் இருக்கும்படி செய்து, ராமர் மலைச்சாரலில் வாஸம் செய்து கஷ்டப்பட்டதும், கார்காலம் முடிந்தவுடன் ஸுக்ரீவன் வானரர்களை நான்கு திக்கிலும் ஸீதையைக் கண்டுவர அனுப்பியதில், ஹநுமார், அங்கதன், ஜாம்பவான் முதலிய மஹாத்மாக்களைத் தெற்குத் திக்கை நோக்கி அனுப்பினதும், மற்றைய திக்கை நோக்கிச் சென்றவர்கள் ஸீதையைக் காணாது, குறித்த நாளுக்குள் ஸுக்ரீவாக்ஞைப்படித் திரும்பிவந்ததும், தெற்கே சென்றவர்கள் போகும்வழியில், ஒரு பிலத்துள் அகப்பட்டுச் சிலநாள் கிடந்து, பின்பு தெற்கு ஸமுத்ரம் வர, ஸுக்ரீவன் குறிப்பிட்டநாள் கழிந்தது கண்டு, உயிரிழக்க அங்கு தயார்செய்ததும், அப்பொழுது அவர்கள் சொல்லிக்கொண்டிருந்த ராமகதையையும், ஜடாயு மரணத்தையும் கேட்டிருந்த ஜடாயு தமையனான ஸம்பாதி என்ற கழுகு, ஸீதை லங்கையில் அசோகவனத்தில் இருப்பதை அவர்களுக்குத் தெரிவிக்க, ஸம்பாதிக்குச் சிறகுகள் முளைத்து அவன் ஸுகமடைந்ததும், அப்பொழுது ஜாம்பவான் முதலிய வானரங்கள் ஹநுமாரைத் துதிக்க அவருக்கு பலவ்ருத்தி யுண்டாகி, ஸமுத்

ரத்தைத் தாண்டத்தயாராகி அவர் மஹேந்த்ரமலையின் மேல் ஏறியதுமே, இக்காண்டத்திலடங்கிய கதையாம்.

வின 12.—ஸுந்தரகாண்டக்கதை, என்ன?

விடை.—ஹநுமார் அதிவேகமாய் லங்கையை நோக்கித் தாவிப்போகையில், வழியில் வந்த ஆபத்துக்களிலிருந்து தப்பியதும், லங்கையுள் இரவில் சென்று ராவணனது அரண்மனை முழுவதும் ஸீதையைத் தேடி விட்டு, கடைசியில், அசோகவனத்தில் ஸீதையிருந்த மரத்திற்கு வந்து ஓரிலையில் மறைந்திருக்கையில், ராவணன், ஸீதையைப் படுத்திய பாட்டையும், அதற்கு அவள் நடந்துகொண்ட மாதிரியையும் கண்டு வியந்ததும், பின்பு ஸீதைக்குத் தம்மிடத்து நம்பிக்கை பிறக்க ஹநுமார் மரத்திலிருந்தபடியே அப்பொழுது ராமர் கதையைச் சொல்லி ஸீதை எதிரில் வந்து, ராமர் கொடுத்த கணையாழி மோதிரத்தைக் கொடுத்து, தேவியிடமிருந்து சூடாமணி பெற்றுக்கொண்டதும், பின்பு அசோகவனத்தை அழித்ததும், அப்பொழுது தம்மோடு சண்டைக்கு வந்த ராக்ஷஸவீரர்களைக் கொன்றதும், கடைசியில் அவர் இந்த்ரஜித்தின் (ராவணன் பிள்ளை) ப்ரஹ்மாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட, அவர் வாலை ராக்ஷஸர் கொளுத்திவிட்டதும், அப்பொழுது ஹநுமார் லங்கை முழுவதையும் தம் வாலால் கொளுத்தி அழித்ததும், பின்பு தம வாலை ஸமுத்ரத்தில் அணைத்துக் கொண்டு ராமரிடம் வந்து சூடாமணியை ஹநுமார் கொடுத்ததும், ஸீதை தம்மிடம் சொல்லியனுப்பியவைகளை ஆகியோடந்தமாய் ஹநுமார் ராமரிடம் சொன்னதுமே இக்காண்டத்தின் கதை.

வினா 13.—யுத்தகாண்டத்தின் கதை என்ன?

விடை.—ராமர் வாநரஸேனைகளோடு தெற்கு ஸமுத்ரக்கரை வந்ததும், அங்கு ராவணனது தம்பியாகிய விபீஷணர், ராமரிடம் வந்து சரணமடைந்ததும், பின்பு ராமர் ஸமுத்ர ராஜனை நயந்து தனது ஸேனைக்கு வழி விடும்படி கேட்க, பயன்படாதது கண்டு, தமது பாணங்களால் ஸமுத்ரத்தை வற்றும்படி செய்யத் தொடங்கியதும், பின்பு ஸமுத்ரராஜன் வந்து காலில் விழ, அவனையும் வாநரர்களையும் வைத்துக்கொண்டு, நளன் என்ற வாநரன் மூலமாய், ஸமுத்ரத்திற்குக் குறுக்கே லங்கை வரை அணையிட்டு, லங்கை சென்று, விபீஷணரது உதவியினால் கும்பகர்ணன் இந்த்ரஜித்து மூலபலங்கள் ராவணன் முதலியவர்களை வெகு கஷ்டத்தின்பேரில் அழித்து, விபீஷணனுக்கு முடிசூட்டிக் கடைசியில் ஸீதையை அக்நி ப்ரவேசம் செய்யும்படி செய்து, அவளுடைய உண்மை நிலையை ஸகலரும் அறியும்படி செய்து, அவளை அழைத்துக்கொண்டு அயோத்யைக்கு வந்து பரதன் முதலியவர்களை த்ருப்தி செய்துவைத்து, வாநரர்கள், ராக்ஷஸர்கள், மஹரிஷிகள் முதலியவர்கள் ஸந்நிதானத்தில், ராமர் பட்டாபிஷேகம் செய்துகொண்டதுமே இக்காண்டத்தின் கதை.

வினா 14.—உத்தர காண்டத்தின் கதை என்ன?

விடை.—பட்டாபிஷேகமானதும், அகஸ்தியர் முதலிய ரிஷீச்வரர்கள் வந்து ராவணனது, பிறப்பு முதலியவைகளை விஸ்தாரமாய்ச் சொல்லியதும், ஊரில் ஸீதை விஷயமாய் உண்டான அபவாத நிமித்தம்,

அவள் கர்ப்பமாய் இருக்கையில் அவளை ராமர் தள்ளி விட, அவள் குசலவர் என்ற இரண்டு பிள்ளைகளை வால்மீகர் ஆச்ரமத்தில் பெற்றதும், சத்ருக்நர் லவணாஸுரனை வதம் செய்ததும், ராமர் செய்த அச்வமேத யாகசாலையில், குசலவர் வால்மீகர் செய்த ராமாயண காவ்யத்தைக் கானம் செய்ததும், பின்பு ராமருடைய வேண்டுகோளின்படி ஸீதை யாக ஸபையில் வந்து, தன் உண்மை நிலையை யாவரும் அறியக் காட்டுவதாக ஒப்புக்கொண்டு அங்கு வந்து பூமியில் மறைந்ததும், ராமர் அப்பொழுது அடைந்த துக்கத்தை ப்ரஹ்மா மாற்றியதும், பின்பு ராமர் தமது பிள்ளை முதலியவர்களை அரசாளும்படி வைத்ததும், அப்பொழுது ப்ரஹ்மாதி தேவதைகளால் ஏவப்பட்டு, காலன் ப்ராஹ்மண உருவாய் வந்து, ராமனை வைகுண்டத்திற் கழைத்துப் போவதற்காக லக்ஷ்மணனையும் ராமனையும் பிரித்துவிட, லக்ஷ்மணர் முதலில் வைகுண்டமடைந்ததும், பின்பு விபீஷணர், ஹநுமார், ஜாம்பவான், மைந்தத்விதர் முதலியவர்களை உலகிலிருக்கும்படி நிறுத்திவிட்டு மற்றவர்களைத் தம்முடன் ராமர் அழைத்துக்கொண்டு, ஸரயுவை அடைந்து, எல்லோருக்கும் ஸ்வர்க்கமளித்து, வைகுண்டம் சென்று உலகத்தைப் பாதுகாக்கும்படியாக யோக நித்ரையில் இருப்பதுமே இக்காண்டத்தின் கதை.

1. பால காண்டம்

அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்பர் கைவி லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்.

வினா 1.—தசரதர் யார்?

விடை.—தசரதர் என்பவர், இக்ஷ்வாகு என்ற அரசன் வம்சமாகிய ஸூர்யவம்சத்தில் பிறந்து, ஸரயூ நதி தீரத்திலிருக்கும் அயோத்யையை ப்ரதான பட்டணமாகவுடைய கோஸலதேசத்தை மநுநெறி வழுவாது அரசாண்டுவந்த ஒரு சிறந்த அரசர்.

வினா 2.—இவருக்கு என்ன குறை இருந்தது? இவர் இதைத் தீர்க்க என்ன உபாயம் செய்தார்?

விடை.—இவருக்கு ஸகல ஐச்வர்யங்களும் வாய்ந்திருந்தும், புத்ரபாக்யம் மாத்ரம் இல்லாமலிருக்க, இவருக்குத் துக்கம் உண்டாயிற்று. இதைத் தீர்ப்பதற்காக இவர் ஸகல ப்ராஹ்மணர்களது அநுமதியின் பேரில், ஸரயுவின் வடகரையில் ஒரு அச்வமேத யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி, தம மந்த்ரிகளுக்குக் கட்டளையிட்டார். இந்த யாகம் பூர்த்தியானால் தமக்குப் பிள்ளை பிறக்கும் என்ற பூர்ண நம்பிக்கை இவருக்கு இருந்தது.

வினா 3.—இந்த ஸமயத்தில் யார் எவ்வாறு தசரதருக்கு யாக விஷயமாய்ப் புத்திமதி கூறியது?

விடை.—தசரதரது ஸாரதியாகிய ஸுமந்த்ரர் என்பவர் அரசனிடம் வந்து, "விபாண்டக ரிஷியின் பிள்ளையாயும் உமது பெண்ணாகிய சாந்தையின் கணவராயும் உள்ள ரிச்யச்ருங்கரை அழைத்து விசாரித்தால், இந்த விஷயத்தில் உமக்கு வேண்டிய ஸஹாயம் அவர் செய்வார்" என்று சொன்னார்.

வினா 4.—சாந்தை தசரதர் பெண்ணாய் இருக்க, இவருக்கு இவளைப்பற்றிய ஞாபகம் ஏன் இல்லாமல் போய்விட்டது?

விடை.—தசரதர் இந்த சாந்தையைச் சிறு பெண்ணாய் இருக்கும்பொழுதே, அங்கதேச அதிபதியாகிய ரோமபாத ராஜாவிற்குத் தத்தாகக் கொடுத்துவிட்டார். அதனால் சாந்தையைப்பற்றியாவது அவளது கணவனைப்பற்றியாவது இவருக்கு உடனே ஞாபகம் வரவில்லை.

வினா 5.—இந்த ரிச்யச்ருங்கர் யார்? இவருக்குச் சாந்தையைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டிய ஸந்தர்ப்பம் வருவானேன்?

விடை.—காச்யபரிஷியினது பேரன் ரிசயச்ருங்கர். இவருக்குத் தமிழில் கலைக்கோட்டு மாமுனி என்று பெயர். இவர் சிறுவராய் இருக்குங்கால், இவருக்கு ஸ்த்ரீகள் இவ்வாறு இருப்பார்கள் என்பதே தெரியாது. இப்படி இருக்கையில், அங்கதேசாதிபதி சில தாஸிகளை இவரிடம் அனுப்பி, இவரைத் தமது தேசத்திற்கு அழைத்துவரும்படி செய்தார். தாஸிகளைக் கண்டதும் அவர்களை இவர் ஒருவித ரிஷிகள் என்று பாவித்திருந்தார். ஆகவே அவர்கள் கூப்பிட்

டதும் அவர்களோடு இவர் அங்கதேசம் வர, இவருக்கு ரோமபாதராஜன் தம் தத்துப்பெண்ணை விவாஹம் செய்துகொடுத்தார்.

வினா 6.—இவ்வாறு காட்டில் ஒன்றையும் கவனியாது தபஸு செய்துவந்த சுத்தரான ரிஷியை, இவ்வரசன் வலிய உலக இன்பங்களில் இழுப்பானேன்?

விடை.—இவ்வரசன் தேசமாகிய அங்கதேசத்தில், ஒருகால் மழை யில்லாமலே போக, குடிகள் மிக வருந்தினர். அரசன் ப்ராஹ்மணர்களை அழைத்துக் கேட்க அவர்கள், 'விபாண்டகர் பிள்ளையை இங்கு எப்படியாவது அழைப்பித்தால், உடனே உமது தேசத்தில் மழை ஏராளமாய்ப் பெய்யும்' என்று சொல்ல, ஸ்த்ரீகளை இப்படிப்பட்டவர்கள் என்று அறியாத அவரை ஜனங்களது பொது நன்மைக்காகத் தமது தாதிமார் மூலமாய் அரசன் தனது தேசத்திற்கு அழைத்து வந்தான். ரிச்யச்ருங்கர் ஊருக்குள் வந்ததும், மழை தாரை தாரையாய்ப் பொழிந்தது. வந்த மஹானுக்கு அரசன் தன் பெண்ணைத் தாநம்செய்து தனது பாபங்களைத் தீர்த்துக்கொண்டான்

வினா 7.—இந்த ரிச்யச்ருங்கர் வந்து தசரதருக்கு யாகவிஷயத்தில் என்ன உபாயம் சொன்னார்?

விடை.—அச்வமேத யாகம் விதிப்படி நடந்தேறியதும், தசரதராஜனுக்கு ரிச்யச்ருங்கர் 'புத்ரகாமேஷ்டி என்ற யாகத்தைச் செய்தால், அது பூர்த்தியானதும் யஜமானனுக்குப் பிள்ளை பிறப்பது வழக்கம்' என்று சொன்னார்.

வினா 8.—இந்த யாகம் நடந்துகொண்டிருக்கை

யில். அங்கு யாரெல்லாம் வந்திருந்தார்கள்? அவர்களுள் என்ன தீர்மானம் செய்யப்பட்டது?

விடை.—தேவதைகள் முதலியவர்கள் யாகத்தில் ஹவிர்ப்பாகம் வாங்க அங்கு வந்து கூடினார்கள். ப்ரஹ்மாவும் விஷ்ணுவும் அங்குவந்திருந்தனர். அப்பொழுது தேவதைகள் ப்ரஹ்மதேவரை நோக்கி, 'உம்மால் கொடுக்கப்பட்ட வரபலத்தால், ராவணன் உலகங்களை வருத்துகிறான். (இதன் விபரத்தை உத்தரகாண்டத்தில் காண்க.) இந்தத் துராத்மாவை ஒழிக்க இத்தருணத்தில் எதாவது உபாயம் செய்ய வேண்டும்' என்று கேட்டார்கள். ப்ரஹ்மா, 'இந்த ராவணனுக்கு ஒருவராலும் சாவு வரமாட்டாது, ஆனால் மனிதரையும் குரங்குகளையும் தனக்கு ஆஹாரமாக எண்ணி, அவைகளால் தனக்குச் சாவு வரக்கூடாது என்று அவன் வரம் கேட்கவில்லை. ஆகையால் அவனை இந்த ரூபங்கள் எடுத்துதான் கொல்லவேண்டும்' என்று சொன்னார். பின்பு, ப்ரஹ்மாவும் தேவதைகளும் விஷ்ணுவிடம் சென்று, இதைச் சொல்லி முறையிட, விஷ்ணு அவர்கள் வேண்டுகோளின்பேரில் தாமே தசரதராஜனுக்குப் புத்ரர்களாக அவதரிப்பதாக ஒப்புக்கொண்டு, மற்றைய தேவதைகளையும் குரங்குகளாகப் பிறந்து தமக்கு ஸஹாயமாக இருக்கும்படி கட்டளையிட்டு மறைந்தார்.

வின 9.—இப்படித் தேவதைகளுள் ஒரு தீர்மானம் உண்டானதும், யாகத்தில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—உடனே தசரதரது ஹோமாக்நியினி

ருந்து ஒரு திவ்யபுருஷன், ஒரு பொற்பாத்திரத்தில் திவ்ய பாயஸத்தை எடுத்துக்கொண்டு வெளி வந்து, அதை அரசனது மனைவிகளுக்குக் கொடுத்தால் அவர்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் பிள்ளைகளுண்டா கும் என்று சொல்ல, அரசன் அந்தப் பாயஸத்தைப் பெற்றுக்கொண்டார். உடனே அந்தத் திவ்ய புருஷன் அக்கினியில் மறைந்துவிட்டான்.

வினா 10.—தசரதர் எவ்வாறு இவரது பட்ட ஸ்த்ரீகளுக்கு இந்தப் பாயஸத்தைப் பாகம் செய்து கொடுத்தார்?

விடை.—முதல் ஸ்த்ரீயாகிய கௌஸல்யைக்கு ஒரு பாகமும், அதன்பின்பு இரண்டாவது ஸ்த்ரீயாகிய ஸுமித்ரைக்கு ஒரு கால்பாகமும், அதன்பின்பு மூன்றாவது ஸ்த்ரீயாகிய கைகேயிக்கு மீதியிருந்ததில் ஒரு பாகத்தையும் கொடுக்க, மிஞ்சியதை அரசன் ஸுமித்ரைக்குக் கொடுத்துவிட்டார்.

வினா 11.—மஹாவிஷ்ணு கட்டளையை எவ்வாறு தேவதைகள் நடத்தினார்கள்?

விடை.—இந்த்ரன் தனது அம்சத்தால் வாலியாகவும், ஸூர்யன் ஸுக்ரீவனாகவும், ப்ருஹஸ்பதி தாரனாகவும், குபேரன் கந்தமாதனனாகவும், விச்வகர்மா நளனாகவும், அக்னி நீலனாகவும், அச்வனீ தேவதைகள் மைந்த த்விதர்களாகவும், வாயு ஹநுமானாகவும் இதுபோல் ஒவ்வொரு தேவதைகளும் ரிஷிகளும் ஒவ்வொரு பெரிய குரங்காகக் கடவுளது ஸஹாயார்த்தம் உலகில் வந்து பிறந்தனர். முன்னமே ப்ரஹ்மாவால் உற்பத்தி பண்ணப்பட்ட ஜாம்பவான் என்ற கரடி ராஜனும்,

இவர்களுடன் சேர்ந்து காடுகளில் வசிக்கத் தொடங்கினான்.

வினா 12.—தசரதராஜனுக்குப் பிள்ளைகள் பிறந்ததின் விவரம் என்ன? தசரதர் நிலை எவ்வாறு மாறியது?

விடை.—கௌஸல்யை இடம் நவமி தினம் புனர்வஸுவில், மஹாவிஷ்ணுவினது பாதிசக்தியுடன் ஸ்ரீராமர் அவதரித்தார். இதன்பின்பு கைகேயியிடம் கடவுளது அரைக்கால் சக்தியுடன் பரதர் அவதரித்தார். ஸுமித்திரையிடம் கடவுளது கால் சக்தியுடன் லக்ஷ்மணர், அரைக்கால் சக்தியுடன் சத்ருக்நர் என்று இரண்டு பிள்ளைகள் உண்டானார்கள். இவ்வாறு துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம் கடவுள் அவதரித்ததும், ப்ரபஞ்ச முழுவதும் ஆநந்தத்தை அடைந்து, தழைத்து ஓங்கியது. எங்கு பார்த்தாலும், கோலாஹலமாகவே இருந்தது. பிள்ளைகள் பிறந்தது முதல், அவர்களிடம் தசரதருக்கு அன்பு அதிகரிக்க அவர்களுக்கு நடக்கவேண்டிய சடங்கு விசேஷங்களை வெகு குதூகலமாய் நடத்தினார். முக்யமாய் இவருக்கு ராமரிடம் ப்ரியம் அதிகரிக்க, வரவர இவர் ராமரைவிட்டுப் பிரியாமலே இருந்துவந்தார். இவ்வாறு ராமர் முதலிய பிள்ளைகளோடு கூட இவர் ஆநந்தத்தை அநுபவித்துவந்தார்.

வினா 13.—இவ்வாறு இருந்த தசரதரது ஆநந்தத்திற்கு எவ்வாறு தடை ஏற்பட்டது?

விடை.—ஒருநாள் தசரதர் ஸபையிலுட்கார்ந்து, ராமரது கல்யாண விஷயமாய் யோசித்துக்கொண்

டிருக்கையில், தமது தபோபலத்தாலேயே 'மேலான ப்ராஹ்மண நிலையை அடைந்த விச்வாமித்ர மஹரிஷி, அந்த ஸபைக்கு வந்தார். ரிஷியைக் கண்டதும், அரசன் முதலியோர் எழுந்து அர்க்யபாத்யாதி உபசாரம் செய்து அவரை ஒரு திவ்ய ஆஸனத்தில் உட்கார்த்தி விட்டு அவர் உத்தரவின்பேரில் தாமும் உட்கார்ந்தனர். பின்பு விச்வாமித்ர ரிஷி, அரசனிடம் இருந்து தாம் கேட்கும் விஷயத்தை மறுக்காது கொடுப்பதாக உறுதி வாக்கைப் பெற்றுக்கொண்டு, தமது யாகத்தை ராக்ஷஸ பாதையிலிருந்து ரக்ஷிப்பதற்காக ராமனை மாத்ரம் தம்மோடு பத்துநாள் விட்டுவைக்க வேண்டும் என்று கேட்டார்.

வினா 14.—இதைக் கேட்டதும் தசரதர் நிலை என்னமாயிற்று? அவர் கடைசியில் என்ன செய்தார்? ஏன்?

விடை.—இதைக் கேட்டதும் அவருக்கு அடங்கா துக்கம் வந்துவிட்டது. ராமன் இந்த ரிஷியோடு காட்டிற்குச் சென்று ராக்ஷஸர்களுடன் எவ்வாறு சண்டையிடப் போகிறான் என்ற ஏக்கம் தசரதரது மனதில் உண்டாயிற்று. ராமனை அனுப்பாவிடில் ரிஷி சபித்து விடுவாரோ என்ற பயமும் தட்டியது. இப்படி தத்தளிக்கும் அரசனை, விச்வாமித்ரர் ராமனது மேன்மைகளை எடுத்துச் சொல்லி, எவ்வளவோ தேற்றிப் பார்த்தும் அவரால் ஒன்றும் முடியவில்லை. உடனே ஸபையிலிருந்த வஸிஷ்டர் எழுந்து 'ராமனை இந்த ரிஷியுடன் அனுப்பிவித்தால் அவனுக்கு மேன்மையும் சிறப்பும் உண்டாகும்' என்று வெகுவாகச் சொல்ல, கடைசியில்

அரசன் ராமனை ரிஷியோடு அனுப்ப ஒருவாறு இசைந்தார். உடனே ராமனை அழைத்து ரிஷியிடம் ஒப்புவிக்க, லக்ஷ்மணனும் ராமனோடு போய்வருவதாகப் புறப்பட்டான்.

வினா 15.—விச்வாமித்ரர் இவர்களைக் கூட்டிக்கொண்டு போகையில் முதலில் எங்கு என்ன செய்தார்?

விடை.—ராமலக்ஷ்மணர்கள் விச்வாமித்ரரைப் பின்தொடர்ந்து ஸரயூநதிக்கரையை அடைந்தார்கள். அங்கு ரிஷி இவர்களுக்கு ராக்ஷஸர்களது பலத்தைவிட அதிக பலம் வருவதற்காகவும், சண்டை முதலியவைகளில் ச்ரமம் வாராதிருப்பதற்காகவும், பலை, அதிபலை என்னும் இரண்டு மந்த்ரங்களை உபதேசித்தார். 'இந்த மந்த்ரங்களை உச்சரித்துக்கொண்டு வந்தால் வழி நடந்து போகுங்கால் பசி முதலியபாதைகள் வாரா' என்று மந்த்ர மஹிமையையும் அவர்களுக்கு எடுத்துரைத்தார். இவைகளை ராமலக்ஷ்மணர்கள் பெற்றுக்கொண்டு, அன்றிரவை அந்நதிக்கரையிலே வெகு ஸந்தோஷமாய்க் கழித்தார்கள்.

வினா 16.—இதன் பின்பு இவர்கள் எங்கே தங்கினார்கள்? அந்த இடத்தின் விசேஷம் என்ன

விடை.—மறுநாட்காலையில் எழுந்து, நித்யக்கடன்களை ஸரியாக முடித்துக்கொண்டு, வழிநடக்கத் தொடங்கி, கங்காஸரயூஸங்கமம் வந்து, அங்கு ஓர் ஆச்ரமத்தைக்கண்டார்கள். விச்வாமித்ரர், அங்கேதான் பரமசிவன், தம்மனதைக் கலக்கவந்த மன்மதனை எரித்தாரென்றும், மன்மதன் அங்கு அங்கத்தை விட்டபடியால் அதற்கு அங்கதேசம் என்று பெயர் வந்ததென்றும்,

அந்த ஆச்ரமம் சிவனைச் சேர்ந்ததென்றும், அங்குள்ள ஸந்யாஸிகளும் ரிஷிகளும் தலைமுறை தலைமுறையாய் சிவனது சிஷ்யர்கள் என்றும், ஆகையால் அவ்விடம் பரிசுத்தமாயும் வாஸயோக்யமாயும் உள்ள இடம் என்றும், ராமலக்ஷ்மணர்க்கு எடுத்துச் சொல்லி, அன்றிரவு அங்கு இருப்பதாகத் தீர்மானித்தார். இதற்குள் அங்கிருந்த மஹான்கள் ஞானத்ருஷ்டியால் இவர்கள் இன்னார் என்று அறிந்து, எதிர்கொண்டு வந்து, இவர்களை அழைத்துமபோயினர். அங்கு இவர்கள் மஹான்களோடு அன்றிரவு தங்கினார்கள்.

வினா 17.—மறுநாள் காலையில் இவர்கள ப்ரயாணத்தைத் தொடங்குகையில், மஹரிஷிகள் அந்தக் காட்டின் விசேஷத்தைப்பற்றி என்ன சொன்னார்கள்?

விடை.—அந்தக் காட்டில் ஸுந்தன் என்ற ராக்ஷஸனது பெண்சாதியான தாடகையும், அவள் பிள்ளையான மாரீசனும் இருக்கிறார்கள் என்றும், தாடகைக்கு ஆயிரம் யானை பலம் உண்டென்றும், அவள் அக்காட்டிலுள்ள ஸகல ஜந்துக்களையும் வருத்துவது வழக்கம் என்றும், ராமலக்ஷ்மணர் போகும் வழியில் அவள் வழியை மறித்துக் கொண்டிருப்பாள் என்றும், அவளை ராமலக்ஷ்மணர் கொன்று அங்குள்ள ரிஷிகளுக்கு ஸுகத்தை உண்டாக்கவேண்டும் என்றும், கங்கா ஸரயூ ஸங்கமத்தில் வஸித்திருந்த மஹரிஷிகள், விண்ணப்பம் செய்துகொண்டார்கள்.

வினா 18.—தாடகைபோன்ற ஒரு ஸ்த்ரீக்கு இவ்வளவு பலம்வரக் காரணம் என்ன? ஸ்த்ரீயைக் கொல்லும்படி ராமரை இவர்கள் வேண்டியது ந்யாயமா?

விடை.—முன்காலத்தில் ஸுகேது என்றொரு யக்ஷன் இருந்தான். அவன் மஹா சுத்தன். அவனுக்குப் பிள்ளை இல்லாதிருந்ததால், ப்ரஹ்மதேவர் அவனுக்குத் தாடகை என்ற பெண்மணியைக் கொடுத்தார். அவனுக்குப் பிள்ளை உண்டாகக் காரணமில்லாமலிருந்ததால் இப்பெண்ணுக்கு ஆயிரம் யானை பலத்தைக் கொடுத்தார். இவள் ஸுந்தனைக் கல்யாணம் செய்துகொண்டு, மாரீசன் என்ற பிள்ளையை அடைந்தாள். கொஞ்சநாள்களில் ஸுந்தன் இறக்க, தாடகையும் மாரீசனும் அகஸ்த்யரை உபத்ரவப்படுத்தி; அவரை விழுங்கச் சென்றார்கள். இவர்களை ராக்ஷஸர்களாகப் போகக்கடவர் என்று அவர் சபித்தார். இதனால் இவர்கள் கோபங்கொண்டு, அந்தக் காட்டில் உள்ளவைகளை அழிக்கத் தொடங்கினார்கள். இப்படிப்பட்ட துர்மார்க்கமான ஸ்த்ரீயை ராஜ்யத்தின் பொது நன்மைக்காக அரசர்கள் கொல்லுவது ந்யாயந்தான். இதனால் அரசர்களுக்கு ஸ்த்ரீ ஹத்தி தோஷம் வராது.

வினா 19.—ராமர் போகும் வழியில் தாடகை வதம் எவ்வாறு நடந்தது?

விடை.—ராமர் தாடகை இருக்கும் இடத்தருகே வந்ததும், தமது வில்லை நாணேற்றி, நாணோசை செய்ய அங்குள்ள ஜந்துக்கள் யாவும் பயந்து ஓடின. தாடகைக்கு இந்தச் சப்தத்தைக் கேட்டதும், அதிகக் கோபம் உண்டாக, பெரிய அட்டஹாஸம் செய்துகொண்டு ராமலக்ஷ்மணரை எதிர்த்து வந்தாள். அப்பொழுது விச்வாமித்ரர், 'இவர்களுக்கு ஜயம் வாட்டும்' என்று உரக்கக் கூவினார். தாடகை தனது மாயாசக்தி

யின் மூலமாய்க் கற்பாறைகளை வர்ஷிக்கத் தொடங்கி னாள். இவைகளை ராமர் தமது பாணவர்ஷங்களால் தடுத் துவிட்டுத் தாடகையினது கைகளை அறுத்தார். மேலும் தாடகை கற்பாறைகளை வர்ஷிக்கத் தொடங்க, விச் வாமித்ரர் ராமலக்ஷ்மணர்களை நோக்கி, 'ஸூர்யாஸ்த மனம் ஆய்விட்டால், ராக்ஷஸர்களை ஜயிப்பது அஸாத் யம், ஆகையால் சீக்ரம் இவளைக் கொன்றுவிடுங்கள்' என்று உரக்கக் கத்தினார். இதைக் கேட்டதும் இவர் கள் தமது பாண வர்ஷத்தால் தாடகையை மறைத்து விட்டார்கள். இந்தச் சரக்கூட்டை அவள் தனது மாயை யால் பேதித்துக்கொண்டு வெளியே வந்து, ராமலக்ஷ்ம ணரை விழுங்கவர, அவர்கள் இந்த ஸமயம் பார்த்திரு ந்து இடிபோன்ற பலமான பாணங்களால் அவளை அடித்துக் கீழே தள்ளிவிட்டார்கள். உடனே அந்த லோககண்டகி இறந்தாள்.

வினா 20.—இதன்பின்பு ராமலக்ஷ்மணர் என்ன செய்தார்கள்? விச்வாமித்ரர் என்ன செய்தார்?

விடை.—இவர்கள் அன்றிரவு தாடகாவநத்தி லே தங்கி, மறுநாட்காலையில் எழுந்து தமது காலைக்க டனை முடித்துக்கொண்டார்கள். உடனே விச்வாமித்ரர், ராமலக்ஷ்மணர்களது பராக்ரமத்தை மெச்சிக்கொண்டு அவர்களுக்குத் தமக்குத்தெரிந்த ஸகல அஸ்த்ரங்களை யும் உபதேசித்து, அவைகளை அடக்கும் வழியையும் சொல்ல, அவைகளில் அவர்கள் அதிசீக்ரத்தில் தேர் ச்சி யடைந்தார்கள். அதன்பின்பு அவர்கள் அவ்வநம் விட்டு புறப்பட்டார்கள்.

வினா 21.—இவ்வாறு ராமலக்ஷ்மணர்கள் அவ்விடம்

வித்தைகளை விச்வாமித்ரரிடம் தெரிந்துகொண்டதும், எங்கே போய்ச் சேர்ந்தார்கள்? அங்கு இருந்த மேன்மை என்ன?

விடை.—இவர்கள் ஸித்தாச்ரமம் வந்து சேர்ந்தார்கள். இதுதான் விச்வாமித்ரர் யாகம் செய்யப்போகிற இடம். இங்கு ராமலக்ஷ்மணர் யாக ஸம்ரக்ஷணம் செய்யவேண்டியது. இவ்விடத்தில் முன்காலத்தில் பகவான் வாமனமூர்த்தியாய்த் தபஸ்செய்து விளங்கினர். இங்குதான் தேவதைகள் அக்நிபகவானை முன்னிட்டுக் கொண்டு பலிசக்ரவர்த்தி யாகத்தில் சென்று, இந்த்ரனுக்கு த்ரிலோகத்தையும் ஸம்பாதித்துக் கொடுக்கவேண்டும் என்று வாமனரைக் கேட்டது. அத்தருணத்திலேயே காச்யபர்வந்து பகவானைத் தமக்குப் பிள்ளையாய்ப் பிறந்து இந்த்ரனுக்குத் தம்பியாகவேண்டும் என்று கேட்க, பகவான் உடனே காச்யபரது பிள்ளையாகப் பிறந்து வாமந உருவத்தோடு பலிச்சக்ரவர்த்தியை அடைந்து மூன்றடி மண் யாசித்து, இந்த்ரனுக்கு த்ரிலோகாதிபத்யம் கொடுத்தார். இப்படிப்பட்ட மஹிமையை உடையது இந்த ஸித்தாச்ரமம்.

வினு 22 — ஸித்தாச்ரமத்தில் ராமலக்ஷ்மணர் எவ்வாறு யாகத்தை ரக்ஷித்தார்கள்?

விடை.—ஸித்தாச்ரமம் வந்ததும் விச்வாமித்ரர் யாகத்தைத் தொடங்கினர். ராமலக்ஷ்மணர் தமது வில்லை நாண்பூட்டி வைத்துக்கொண்டு, ராக்ஷஸர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் நீர்கொண்ட மேகம்போன்ற வர்ணமுடைய அநேக ராக்ஷஸர்கள் அட்டஹாஸத்தோடு

மாரீச ஸுபாஹுக்களை முன்னிட்டுக்கொண்டு யாகத்தைக் கலைக்க ஆகாயத்தில் வந்துகூடினார்கள். உடனே ராமர் மாநவாஸ்த்ர ப்ரயோகம் செய்து மாரீசனைத் தூக்கி ஸமுத்ரமத்தியில் எறிந்துவிட்டார். மாரீசன் மூச்சுத்திணறி உயிர்பிழைத்தால் போதும் என்று ஓடிப்போய்விட்டான். இதன் பின்பு ஆக்நேயாஸ்த்ர ப்ரயோகம் செய்து ஸுபாகுவைக் கொன்று கீழே தள்ளிவிட்டு, வாயுவாஸ்த்ரத்தால் மற்றைய ராக்ஷஸர்களைச் சிதற அடித்து ஸம்ஹரித்தார். இதனால் விச்வாமித்ரரது யாகம் ஒரு தடையும் இன்றி முடிந்தது. இதைக்கண்டு ஸகல ரிஷிகளும் ராமலக்ஷ்மணர்களைப் புகழ்ந்து பேசினர்.

வினா 23.—இதன் பின்பு விச்வாமித்ரரும் ராமலக்ஷ்மணரும் எங்கே புறப்பட்டார்கள்? ஏன்? எங்கு வந்து சேர்ந்தார்கள்?

விடை.—இவர்கள் அங்குள்ள ரிஷிகளோடு மிதிலாநகரம் நோக்கிப் புறப்பட்டார்கள். இந்த ரிஷிகள் விச்வாமித்ரரது யாகம் முடிந்ததும், மிதிலா நகரத்தில் ஜநகர் ஒரு யாகம் செய்யப்போகிறார் என்றும், அங்கு ஜநகரால் பூஜிக்கப்பட்டு ஒருவராலும் நாணேற்ற முடியாத சிவதநுஸ் ஒன்றிருக்கிறதென்றும், விச்வாமித்ரருக்குச் சொல்ல, அவர் ராமலக்ஷ்மணரோடு ஸகல ரிஷிகளாலும் சூழப்பட்டு மிதிலைநோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில் சோணா நதிக்கரைக்கு வந்தார்கள்.

வினா 24.—அந்த நதிக்கரையிலுள்ள ப்ரதேசம் யாரைச் சேர்ந்தது? அவரது சரித்ரம் என்ன?

விடை.—அந்த நதிக்கரையிலுள்ள ப்ரதேசம் ப்ராஹ்மாவினது புத்ரரான குச ராஜாவைச் சேர்ந்தது. இவருக்கு வைதர்ப்பி என்பவளிடம் குசநாபர் முதலிய நான்கு பிள்ளைகள் உண்டாகி, ஒவ்வொருவரும் அந்த நதிக்கருகில் ஒவ்வொரு திவ்ய பட்டணத்தை ஏற்படுத்திக்கொண்டு அரசாண்டு வந்தார்கள். இப்படி இருக்கையில் குசநாபருக்கு க்ருதாசி என்ற அப்ஸர ஸ்த்ரீயினிடம் நூறு பெண்கள் பிறக்க, அவர்கள் தகுந்த பர்வத்தை அடைந்தனர். இத்தருணத்தில் இவர்களுக்கு வாயுபகவான் கோபத்தால் கைகால்கள் கோணலாய் விட்டன. இவர்களைக் கல்யாணம் செய்து கொடுப்பது குசநாபருக்குப் பெருங்கவலையாய்ப் போய் விட்டது.

வின 25.—இக்கவலை எவ்வாறு நீங்கியது? அரசனுக்கு ஸந்தோஷ முண்டாகும்படி என்ன நடந்தது?

விடை.—இக்காலத்தில் சூளி என்ற ஒரு ப்ரஹ்மரிஷி தபஸ்ஸு செய்து வந்தார். அவருக்கு ஸோமதா என்ற ஒரு கந்தர்வ ஸ்த்ரீ பணிவிடை செய்து வந்தாள். ஒருநாள் அவளிடம் ரிஷிக்கு க்ருபை உண்டாக, அவள் ரிஷியைத் தனக்கு ஒரு பிள்ளை வேண்டும் என்று கேட்டாள். உடனே ரிஷி இவளுக்குப்ரஹ்மதத்தன் என்ற ஒரு தேஜோவானை குழந்தை பிறக்கும்படி அநுக்ரஹித்தார். இந்த ப்ரஹ்மதத்தர் ஞாபகம் குசநாபருக்கு வர, இவருக்கே தமது குரூபியான நூறு பெண்களையும் கொடுப்பதாக எண்ணிவிட்டார். ப்ரஹ்மதத்தரும் இந்த விஷயத்தை ஒப்புக்கொண்டு வந்து இவர்கள் எல்லோரையும் வரிசையாய்ப் பாணிக்ரஹணம்

செய்து கொண்டார். உடனே ஒவ்வொருத்திக்கும் இருந்த கோணல் நிமிர்ந்துபோக ஒவ்வொருத்தியும் மிகுந்த அழகுள்ள ஸ்த்ரீயாக ப்ரகாசித்தாள். இந்த நூறு ஸ்த்ரீகளையும் அழைத்துச்சென்று தன் தாயிடம்கொண்டு போய் விட்டுத் தன் தாய் முதலிய எல்லோரையும் காப்பாற்றிக்கொண்டு தான் ஏற்படுத்திய காம்பில்ய நகரத்தில் இவர் அரசு புரிந்துவந்தார். இவ்வாறு தம் பெண்கள், இழந்த அழகை மறுபடி அடைந்ததே குசநாபருக்கு மிகுந்த ஸந்தோஷத்தை விளைவித்தது.

வினா 26.—இதன்மேல் குசநாபருக்கு என்ன கவலை உண்டாயிற்று? அது எவ்வாறு தீர்ந்தது?

விடை.—இவ்வாறு தம் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்ததன் பின்னர், தமக்கு ஒரு பிள்ளையும் இல்லையே என்ற கவலை குசநாபருக்கு உண்டானது. உடனே இவர் புத்ரகாமேஷ்டியாகம் செய்யத் தொடங்க, இவரது பிதா கண்முன் தோன்றி, இவருக்கு ஒரு பிள்ளை உண்டாகப் போகிறதாகச் சொன்னார். இவர் சொன்னபடி குசநாபருக்குக் காதி என்று ஒரு நல்ல பிள்ளை பிறந்தான்.

வினா 27.—இந்தக் காதிக்கும் விச்வாமித்ரருக்கும் என்ன ஸம்பந்தம்? விச்வாமித்ரருடன் கூடப் பிறந்தவர்கள் யார்? அவர்கள் அப்பொழுது என்ன விதம் இருந்தார்கள்?

விடை.—இந்தக் காதிதான் விச்வாமித்ரரது தகப்பனார். இவ்விச்வாமித்ரருக்கு ஸத்யவதி என்றொரு தமக்கை உண்டு. இவள் ரிசீகரை மணந்து கடைசியில் ஸர்வ ஜனங்களுக்கும் பரோபகாரமாகக் கௌசிகீ

நதியாக இப்பொழுதும் ஹிமவத் பர்வதத்திலிருந்து ப்ரவஹிக்கிருள்.

வினு 28.—இக்கதை முடிந்ததும் ராமலக்ஷ்மணர்கள் என்ன செய்தார்கள்? மேல் என்ன நடந்தது?

விடை.—இதற்குள் ஸூர்யன் அஸ்தமித்ததும், ராமலக்ஷ்மணர் மாலைக்கடனை முடித்துவிட்டு, ரிஷிகளோடு அன்றிரவை அங்கேயே கழித்துவிட்டு மறுநாட்காலையில் எழுந்து ரிஷிகளோடு கங்கைக்கரைக்கு வர, அங்கு ராமர் விச்வாமித்ரரை நோக்கிக் கங்கை ஸ்வர்க்க மத்யபாதாளம் ஆகிய இவ்விடங்களில் பெருகி வருவதற்கு என்ன காரணம் என்று கேட்டார். இதற்கு விச்வாமித்ரர் கங்கையின் உற்பத்தி, அவள் மூன்று உலகங்களிலும் பெருகியது ஆகிய இந்தத் திவ்ய கதைகளைச் சொன்னுர்.

வினு 29.—கங்கை மூன்று லோகங்களிலும் ப்ரவஹிக்கக் காரணம் என்ன? இவள் எவ்வாறு தேவலோகம் சென்றுள்?

விடை.—கங்கை ஹிமவான் என்ற பர்வத ராஜனுக்குப் பெண்ணுகப் பிறந்தாள். ஒரு காலத்தில் தேவதைகள் எல்லாரும் சேர்ந்து ஹிமவானிடம் வந்து, 'இந்தக் கங்கைக்கு மூன்று உலகங்களிலும் ப்ரவஹித்துப் புனிதமாக்கும் சக்தியைத் தந்தருளி எங்களிடம் அவளை ஒப்புவிக்கவேண்டும்' என்று கேட்டார்கள். அதன்படியே ஹிமவான், அவளுக்கு அந்தச் சக்தியையும் கொடுத்து, அவளைத் தேவர்களிடம் கொடுத்துவிட்டான். இதனுல் அவள் முதலில் தேவலோகம் போனுள்.

வினா 30.—இவளை யார் பூலோகத்திற்கு எவ்வாறு கொண்டுவந்தார்? ஏன்?

விடை.—இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த பகீரதன் என்பவன் தனது மூதாதைகளாகிய 60,000 ஸாகரர்கள் கபிலவாஸுதேவரது கோபாக்நியால் இறந்த பாபத்தைத் தீர்த்து, அவர்களை ஸ்வர்க்கத்திற்கு அனுப்புவதற்காக வெகு கஷ்டமான ப்ரயத்நம் செய்து, கங்கையைப் பூமிக்கு கொண்டுவந்தான்.

வினா 31.—பகீரதன் செய்த ப்ரயத்நத்தின் விவரம் என்ன?

விடை.—பகீரதன் முதலில் ப்ரஹ்மதேவரைக் குறித்து வெகுகாலம் தபஸு செய்ய அவர் ப்ரத்யக்ஷமாகி 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்க அவன் 'கங்கை பூமியில் வந்து எனது மூதாதைகள் சாம்பலாய்க் கிடக்கும் இடத்தில் பாய்ந்து, அவர்களை க்ருதார்த்தப் படுத்தவேண்டும்' என்று கேட்டான். 'கங்கை ஆகாயத்திலிருந்து விழும்போது பூமியால் தாங்கமுடியாது. ஆகையால் அவளைத் தாங்க பரமசிவனது அருள் வேண்டும்' என்று சொல்லி ப்ரஹ்மதேவர் மறைந்தார். உடனே மறுபடியும் பகீரதன் அநேககாலம் பரமசிவனைக் குறித்து தபஸு செய்ய அவர் ப்ரத்யக்ஷமாகி ஆகாய கங்கையைத் தமது ஜடையில் தாங்கிப் பூமியில் விடுவதாக ஒப்புக்கொண்டார். உடனே கங்கை மஹா கர்வத்தோடு பரமசிவனைக் கஷ்டப் படுத்திவிடலாம் என்று அவர் தலையில் வேகமாய் விழுந்தாள்.

வினா 32.—இவள் கர்வம் எவ்வாறு அடங்கியது?

பின்பு இவள் என்ன செய்தாள்? பின்பு பகீரதன் என்ன செய்தான்?

விடை.—இவ்வளவு கர்வத்தோடு விழுந்த கங்கை, பரமசிவனது ஜடையில் இருந்தவிடம் தெரியாமல் அடங்கிப்போய், வெளிவர முடியாது உள்ளேயே கொஞ்சகாலம் சுற்றி அலைந்து கொண்டிருந்தாள். பின்பு பகீரதனது வேண்டுகோளால், கருணாநிதியான பரம்பொருள் கங்கையை மெதுவாகக் கீழே விட்டார். உடனே பகீரதன் பரமசிவனைத் துதித்துவிட்டுக் கங்கைக்குப் பாதாள லோகத்திற்கு வழிகாட்டிக்கொண்டு முன்னே செல்ல, பின்னேவந்த கங்கைக்குக் கர்வம் அதிகரித்தது. இந்தக் கர்வத்தோடு கங்கை ஜஹ்நு என்ற ரிஷியினது யாகசாலையைச் சூழ்ந்துகொள்ள, அவர் இந்தக் கங்கை முழுவதையும் குடித்து, இவளது கர்வத்தை அடக்கி, பின்பு பகீரதனது வேண்டுகோளின்படி காதின் வழியாக வெளியே விட்டார். ஆகையால் கங்கைக்கு ஜாஹ்நவி என்ற பெயர்வந்தது. கங்கை பகீரதன் பின்னே சென்று, ஸாகரர் சாம்பலாய்க் கிடக்கும் கபிலாச்ரமம் வந்து ப்ரவஹித்து ஸாகரர்களை ஸ்வர்க்கமடையும்படி செய்தாள். பகீரதனால் பூமியில் கொண்டுவரப்பட்டு அவனது மூதாதைகளைப் புநிதர்களாக்கியதால், கங்கைக்குப் பாகீரதி என்ற வேறு ஒரு பெயரும் உண்டாயிற்று.

வினா 33.—பகீரதனது மூதாதைகள் கபிலவாஸுதேவரது கோபாக்நியால் இறக்கக் காரணம் என்ன?

விடை.—ஸாகரரது தகப்பனாகிய ஸகர சக்ரவர்த்தி ஒரு அச்வமேத யாகத்தைச் செய்ய எண்ணி,

ஒரு குதிரையைப் பூப்ரதக்ஷிணம் செய்துவரும்படி விட்டான். இக்குதிரையை இந்த்ரன் திருடி பாதாள லோகத்தில் லோகஹிதார்த்தம் தபஸ்செய்துகொண்டிருந்த கபிலவாஸுதேவர் ஆச்ரமத்தருகில் கொண்டுபோய் விட்டுவிட்டுப் போய்விட்டான். குதிரையின் ஸமாசாரம் தெரியாததுகண்டு, ஸகரர் தமது அறுபதினாயிரம் பிள்ளைகளை விட்டு தேடிப்பார்க்கச் சொன்னார். இவர்கள் பூமியை, எங்கு பார்த்தாலும் வெட்டிக்கொண்டு தேடிவருகையில் குதிரையைக் கபிலவாஸுதேவர் அருகில்காண, அவர்தான் குதிரையைத் திருடி வந்தவர் என்றெண்ணி அவரது தபஸைக் கலைக்க, அவர் ஒருதரம் கோபத்தோடு ஹுங்காரம் செய்தார். உடனே ஸாகரர்கள் அறுபதினாயிரம் பெயர்களும் சாம்பலாய் அங்கேயே விழுந்துவிட்டனர்.

வினா 34.—ஸகர சக்ரவர்த்தி குதிரையை எவ்வாறு அடைந்து தமது யாகத்தைப் பூர்த்தி செய்தார்? அவருக்கு என்ன கவலை வந்தது?

விடை.—தமது அறுபதினாயிரம் பிள்ளைகளைப் பற்றிய ஸமாசாரம் ஒன்றும் தெரியாதது கண்டு, ஸகர சக்ரவர்த்தி தமது மூத்த குமாரனாகிய அஸமஞ்சன் பிள்ளையாகிய அம்சுமானை அனுப்பினார். அவன் பாதாள லோகம் சென்று குதிரையைக் கண்டான். உடனே தனது சிற்றப்பன்மார்கள் அடைந்திருக்கும் அலங்கோலத்தைக் கண்டு பரிதபித்து அவர்களுக்கு அபரக்ரியைகளைச் செய்ய யோசிக்கையில், 'இவர்கள் ரிஷி கோபத்தால் இறந்தவர்கள், ஆகையால் இவர்களை ஸாதாரணமான அபரக்ரியைகள் பரிசுத்தப் படுத்தமாட்

டா. ஆகாய கங்கையே கொண்டுவந்து இவர்கள் சாம்பல்மேல் பாயவிட்டால்தான், இவர்களுக்கு நல்லகதி உண்டு' என்று கருடன் சொல்லாக ஒருவாக்குப் பிறந்தது. உடனே அம்சுமான் குதிரையைப் பிடித்துக்கொண்டு தனது பாட்டனாரிடம் வந்து, நடந்த விபரீதம் முதலியவைகளையும் பாதாளத்தில் பிறந்த வாக்கின் ஸாரத்தையும் சொன்னான். ஸகரர் யாகத்தை முடித்துவிட்டுத் தன் பிள்ளைகள் நற்கதியடைய உலகத்திற்குக் கங்கையை எவ்வாறு கொண்டுவருவது என்ற பெருங்கவலைக்கு ஆளானார்.

வினா 35.—ஸாகரர்களது தமயன் யார்? அவன் பிள்ளை அம்சுமானிருக்க அவன் கதி என்னவாயிற்று?

விடை.—ஸகர சக்ரவர்த்தி மூத்த பிள்ளையும், அம்சுமானது தகப்பனுமாகிய அஸமஞ்ஜன் என்பவன், தன் வயதுகாலத்தில் ஊரிலிருக்கும் குழந்தைகளைத் தண்ணீரில் தூக்கி எறிந்துவிட்டு அவைகள் ததத்தளிப்பதைக்கண்டு ஆநந்திப்பதும், கூத்தாடுவதும் வழக்கம். இவன் அரசன்பிள்ளை என்று ஜனங்கள் வெகு காலம் பொறுத்துப் பார்த்தார்கள். வரவர இவனால் கஷ்டம் அதிகரிக்க, ஜனங்கள் அரசனிடம் சென்று முறையிட்டார்கள். உடனே அரசன் தனது பிள்ளை என்றுகூடக் கவனியாது, ஜனங்களது பொது நன்மைக்காக அவனைத் தன் ஊரிலிருந்து நீக்கிவிட்டான். அஸமஞ்ஜன் உண்மையில் கொடியவன் அல்லன், ஸம்ஸார பாதையிலிருந்து தப்புவித்துக் கடவுளை த்யானம் செய்து மோக்ஷமடையவேண்டும் என்ற எண்ணத்தோடு இவ்வாறு செய்தானே ஒழிய அவன் குழ

தைகளைக் கொன்று ஆனந்திக்கத் தகுந்த கொடியவன் இல்லை. ஆகையால் இவனை ஸகரர் காட்டிற்குத் துரத்தியதும் இவன் வெகு ஸந்தோஷத்தோடு வநம்சென்று தவம் செய்யத் தொடங்கினான் என்ற ஒரு கதையும் வழங்கிவருகிறது.

வினா 36.—கங்கையைக் கொண்டுவர ஸகர வம்சத்தில் யார் யார் என்ன ப்ரயத்நம் செய்தார்கள்? அவைகள் என்னமாய் முடிந்தன?

விடை.—ஸகரர், அம்சுமான், திலீபர், ஆகிய இவர்கள் தம்மால் இயன்றவரையில் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவர எவ்வளவோ ப்ரயத்நம் செய்து பார்த்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. திலீபர் வெகு ஆவலோடு இந்த விஷயத்தைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் அவருக்குப் பகீரதர் என்ற பிள்ளை உண்டாக இவர் வெகு ச்ரமத்தின்பேரில் இந்தக் கஷ்டமான கார்யத்தை முடித்து வைத்தார். (இதை நாம் முன்னமே விஸ்தாரமாய்க் கூறியாய்விட்டது)

வினா 37.—இதன் பின்பு விச்வாமித்ரர் முதலியோர்கள் எங்குச் சென்றார்கள்?

விடை.—அன்றிரவைக் கங்கைக் கரையில் கழித்துவிட்டு மறுநாள் காலையில் எல்லோரும் கங்கையைக் கடந்து அக்கரை சென்றனர். அங்கு விசாலை என்ற நகரத்தருகில் அந்நகரத்தின் பூர்வ சரிதத்தை விச்வாமித்ரர் விஸ்தாரமாய்ச் சொன்னார்.


வினா 38.—விசாலா நகரத்தில் என்ன விசேஷம் முன்பு நடந்தது?

விடை.—முன்காலத்தில் தேவாஸுரர் ஸமுத்ர

ம்தநம் செய்கையில், வாஸுகியைக் கயிறுகவும் மந்த்ரமலையை மத்தாகவும் கொண்டு, பாற்கடலைக் கடைந்தனர். அதில் முதலில் உண்டான ஆலாஹல விஷத்தைச் சிவன் பாநம்செய்து, தேவர்களுக்கு நன்மை உண்டாக்கினர். அதில் அநேகம் அரிய வஸ்துக்கள் பின்பு உண்டாய்க் கடைசியில் அம்ருதம் பிறந்தது. (இதன் விஸ்தாரத்தைப் பாகவத வினவிடையில் காண்க) இதற்காகத் தேவாஸுரர்களுக்கு யுத்தமுண்டாக, விஷ்ணு ஸஹாயத்தால் தேவர்கள் அஸுரர்களை அடியோடு வேரறுத்துவிட்டனர். அப்பொழுது அஸுரர்களது தாயாகிய திதி என்பவள் தனது கணவராகிய காச்யபரிடம் சென்று இந்த்ரனைக் கொல்லத்தக்க ஒரு பிள்ளை தரவேண்டும் என யாசிக்க, அவர் அப்படியே அநுக்ரஹித்துச் சென்றனர். திதிதேவி இந்த விசாலா நகரத்தருகில்தான் தவம் செய்து வந்த இடம்.

வின 39.—இவளுக்கு இங்கு தபஸு செய்யுங்கால், என்ன இடையூறு நேரிட்டது? ஏன்? இதனுல் என்ன மாறுதல் உண்டாயிற்று?

விடை.—திதிதேவி ஒருநாள் தான் படுத்து வந்த இடத்தில், தலைவைக்கவேண்டிய இடத்தில் காலையும், கால்வைக்க வேண்டிய இடத்தில் தலையையும் வைத்துப் படுத்துறங்கிவிட்டாள். இவ்வாறு இவள் அசுத்தமான ஸமயம் பார்த்துக்கொண்டிருந்த இந்த்ரன் இவளது கருப்பையுட் புகுந்து இவள் கர்ப்பத்தை ஏழுபாகமாக வெட்டிவிட்டான். இதை அறிந்த திதிதேவி இவைகள் யாவும் தன்குற்றம் என்றறிந்து, பிறக்கும்



அஹல்யை சாபம் நீங்கியது.



ராமர் சிவதனுசை ஒடித்தல்.

ஏழுபிள்ளைகளும் தேவதைகளுக்கு அநுகூலர்களாக இருக்கட்டும் என்ற வரத்தை இந்த்ரனுக்குக் கொடுத்தாள். உடனே இவளிடம் ஏழு மருத்துக்கள் உண்டானார்கள்.

வினு 40.—இக்கதையை ராமலக்ஷ்மணர் கேட்ட பின்பு அன்றிரவு எங்கு தங்கினார்கள்?

விடை.—அன்றிரவு அவர்கள் விசாலா நகரத்தில் அப்பொழுது அரசாண்டுவந்த ஸோமதத்த மஹாராஜன், அவன் பெண்சாதியாகிய ஸுமதி, இவர்களால் எதிர்கொண்டழைத்து மரியாதை செய்யப்பட்டு, அங்கேயே தங்கி மறுநாட்காலையில் எல்லோரும் மிதிலை நோக்கிப் புறப்பட்டார்கள்.

வினு 41.—இதன்பின்பு ராமரால் என்ன விசித்ர கார்யம் செய்யப்பட்டது? பின்பு இவர்கள் எல்லோரும் எங்குச் சென்றார்கள்?

விடை.—மிதிலாநகரத்தருகில் போகையில், இவர்கள் ஒரு ஆச்ரமத்தைக் கண்டார்கள். அந்த ஆச்ரமம் ஏன் நிர்ஜனமாக இருக்க வேண்டுமென்று கேட்ட ராமரை நோக்கி, விச்வாமித்ரர் அது கௌதமர் ஆச்ரமம் என்றும், அங்கு அப்பொழுது இந்த்ரனால் கற்பழிக்கப்பட்ட அஹல்யை, தன் கணவராகிய கௌதமர் சாபத்தால் கல்லாகிக் கிடக்கிறாள் என்றும், அவளுக்கு ராமரது பாததூளி பட்ட மாத்ரத்தில் சாப விமோசன மாகவேண்டும் என்று கௌதமர் ஏற்படுத்தி இருப்பதாகவும், அதற்காக அவள் ராமரது வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறாள் என்றும், வெகு விஸ்தாரமாய் அந்த நிர்ஜனமான ஆச்ரம விஷ

யத்தை எடுத்துரைத்தார். உடனே எல்லோரும் ராமரை முன்னிட்டுக்கொண்டு அந்த ஆச்ரமத்துள் செல்ல, ராமரது பாததூளி பட்ட மாத்திரத்தில் கல்லாயிருந்த அஹல்யை பெண்ணுருவோடு எழுந்து ராமரைப் பூஜித்துத் தான் செய்த பாபங்களிலிருந்து விடுபட்டு நின்றாள். உடனே கௌதம ரிஷியும் விச்வாமித்ரரின் அநுமதியின்படி அவளைத் தன் பத்நியாக அங்கீகரித்து ஆநந்தித்தார். இதன் பின்பு எல்லோரும் மிதிலா நகரத்துள் ப்ரவேசித்தனர்.

வினு 42.—மிதிலா நகரத்துட் புகுந்து ராஜஸபையில் ப்ரவேசித்ததும் அங்கு என்ன நடந்தது ?

விடை.—இவர்கள் ராஜஸபையை அடைந்ததும், ஜநகமஹாராஜன் இவர்களுக்கு அர்க்யபாத்யாதி உபசாரங்கள் செய்து, தகுந்த ஆஸனங்களில் உட்காரவைத்தான். உடனே விச்வாமித்ரர் ராமலக்ஷ்மணர் வரும் வழியில் செய்த விசித்ர விஷயங்களை ஆதியோடந்தமாக, ஜநகமஹாராஜன் முன்பாக எடுத்துச் சொன்னார். அப்பொழுது அருகிலிருந்த ஜநகரது புரோஹிதரும் கௌதம ரிஷியின் பிள்ளையுமாகிய சதாநந்தர், தன் தாயாருக்கு ராமரால் சாபம் நீங்கியதைக் குறித்து ஆநந்தித்துவிட்டு, விச்வாமித்ரரது சரித்ரத்தையும் அவர் மேன்மையையும் விஸ்தாரமாக ராமலக்ஷ்மணர்களுக்கு எடுத்துரைத்தார்.

வினு 43.—விச்வாமித்ரர் யார் ? இவருக்கும் வஸிஷ்டருக்கும் முதலில் எப்படி விரோதம் உண்டாயிற்று ?

விடை.—(முன்னமேயே விச்வாமித்ரரது வம்சவழியைச் சொல்லியாய்விட்டது). இவர் காதிராஜ

வின் புத்ரர். ஒரு நாள் இவர் காட்டில் வேட்டையாடப் போய் வெகுதூரம் சுற்றிவிட்டு வஸிஷ்டாச்ரமம் வந்து வஸிஷ்டரைத் தர்சித்தார். வஸிஷ்டர் விச்வாமித்ராது பரிவாரங்கள் உள்பட எல்லோருக்கும் உணவளிப்பதாகச் சொல்ல, விச்வாமித்ரர் எவ்வளவோ தடுத்துப்பார்த்தார். கடைசியில் வஸிஷ்டரது வார்த்தைப்படி நடப்பதாக ஒப்புக்கொண்டார். உடனே வஸிஷ்டர் காமதேநுவை அழைத்து இவருக்கும் இவர் பரிவாரங்களுக்கும் பெரிய விருந்து செய்யும்படி ஏவ, விச்வாமித்ருக்கு வெகு ஆச்சர்யத்தை உண்டாக்கும்படியாகக் காமதேநு இவர்களுக்கு விருந்து செய்தது. இதைக்கண்ட விச்வாமித்ருக்கு இப்பசுவை எப்படியாவது தாம் வாங்கிப்போகவேண்டும் என்ற எண்ணம் வர, வஸிஷ்டரை இப்பசு விஷயமாய் எவ்வளவோ கேட்டுப்பார்த்தார். வஸிஷ்டர் இதைக் கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை. உடனே விச்வாமித்ரர் காமதேநுவைப் பலாத்காரமாய் அபஹரித்துப் போனார். இதனால் வஸிஷ்டருக்கும் விச்வாமித்ருக்கும் முதலில் விரோதம் உண்டாயிற்று.

வினா 44.—இவ்வாறு பலாத்காரமாய்ப் பிடித்துப் போன காமதேநுவின் கதி என்னவாயிற்று?

விடை.—இப்படி இழுத்துப்போகப்பட்ட காமதேநு வஸிஷ்டரிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு, தன் தேஹத்திலிருந்து அநேக ஜாதி யுத்தவீரரை உண்டாக்கிவிட, விச்வாமித்ராது பரிவாரங்களுக்கும் இந்த யுத்தவீரர்களுக்கும் கொடிய போர் தொடங்கியது. இதில் விச்வாமித்ராது பரிவாரங்கள் யாவும் மடிய, விச்

வாமித்ரரும் தோல்வியடைந்தார். உடனே காமதேநு வஸிஷ்டரிடம் வந்து சேர்ந்துவிட்டது.

வின 45.—இவ்வாறு விச்வாமித்ரர் தோல்வி அடைந்ததும் என்ன செய்தார்?

விடை.—வெகு வெட்கத்தோடும் கோபத்தோடும் தமது ஊர் அடைந்து, தன் பிள்ளைகளுள் ஒருவனுக்கு ராஜ்யாதிகாரம் கொடுத்துவிட்டு, பரமசிவனைக் குறித்துத் தபஸ்செய்ய வநம் சென்றார். அங்கு வெகு நாள் தவம் செய்தபின்னர், பரமசிவன் ப்ரத்யக்ஷமாக, அவரிடமிருந்து ஸகல அஸ்த்ர விசேஷங்களையும் அடைந்தார். இவைகளை வைத்துக்கொண்டு, வஸிஷ்டரை அவர் எதிர்த்துச் சண்டைக்கு வந்தார்.

வின 46.—வஸிஷ்டருக்கும் விச்வாமித்ரருக்கும் அப்பொழுது உண்டான சண்டை எவ்வாறு முடிவு பெற்றது? விச்வாமித்ரருக்கு இதனால் என்ன எண்ணமுண்டாகி என்ன செய்யத் தொடங்கினார்?

விடை.— விச்வாமித்ரர் யுத்த வெறிகொண்டு தம்மை அடிக்க வருவதைக்கண்ட வஸிஷ்டர், தமது ப்ரஹ்ம தண்டத்தைத் தமக்கெதிரில் மந்திரித்து நட்டுவிட்டார். இது விச்வாமித்ரர் விடும் அஸ்த்ரங்கள் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது. கடைசியாகத் தம்மிடம் இருந்த ப்ரஹ்மாஸ்த்ரத்தையும் விச்வாமித்ரர் விட்டுப்பார்த்தார். அதையும் ப்ரஹ்மதண்டம் விழுங்கிவிட்டது. உடனே வெட்கத்தோடு தாம் தோல்வி அடைந்ததாக விச்வாமித்ரர் ஒப்புக்கொண்டார். அப்பொழுது ‘க்ஷத்ரிய பலம் என்ன பலம்! அதைச் சுட வேண்டும், ப்ரஹ்ம தேஜஸின் பலமே பலம்’ என்று

அவர் மனதில் பட, விச்வாமித்ரர் ப்ராஹ்மண்யம் ஸம்பாதிக்க உடனே தபஸுக்குப் புறப்பட்டார்.

வின 47.—இவர் எங்கு சென்று தபஸ் செய்தார்? அங்கு என்ன லாபம் கிடைத்தது? என்ன விக்நம் உண்டாயிற்று?

விடை.—ராஜ்யத்திற்குப் போகாது தெற்கு திக்கை நோக்கிச் சென்று அங்கோரிடத்தில் ப்ராஹ்மண்யம் ஸம்பாதிக்கத் தபஸுக்குத் தொடங்கினர். வெகு காலம் கொடிய தவம் செய்த பிறகு, ப்ரஹ்மா ப்ரத்யக்ஷமாகி, இவருக்கு ராஜரிஷி பதவியைக் கொடுக்க, இது போதாதென்று இவர் மேலும் தபஸ் செய்யத் தொடங்கினர். இப்படித் தபஸ் செய்யுங்கால், சண்டாள ரூபத்தோடு வந்த த்ரிசங்கு ராஜனை ஸ்வர்க்கம் ஏற்றும் விஷயத்தில் இவர் தமது தபோபலம் எல்லாவற்றையும் உபயோகப்படுத்தவேண்டி வந்ததால், இவர் தபஸுக்கு விக்நம் வந்தது.

வின 48.—இந்த த்ரிசங்கு யார்? இவனுக்குச் சண்டாளத்வம் வருவானேன்?

விடை.—இவன் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ஓர் அரசன். இவன் ஒருநாள் தனது குலகுருவாகிய வஸிஷ்டரிடம் சென்று, தன்னைத் தேஹத்தோடு ஸ்வர்க்கம் அடையும்படி செய்யும் ஒரு யாகத்தைச் செய்து வைத்து, தன்னை ஸ்வர்க்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அது அஸாத்யமான கார்யமென்று வஸிஷ்டர் சொல்லிவிட, த்ரிசங்கு வஸிஷ்டரது பிள்ளைகளிடம் இதைச் சொன்னன். அவர்களும் தம்மால் முடியாதென்ற

னர். அப்பொழுது த்ரிசங்கு வேறு குருவை அடுத்து யாகத்தை நடத்திக்கொள்வதாகச் சொல்ல, வஸிஷ்டர் பிள்ளைகள் இவன்மேல் கோபங்கொண்டு 'சண்டாளனாகக் கடவாய்' என்று சபிக்க த்ரிசங்குவிற்குச் சண்டாளத்வம் வந்தது.

வின 49.—அப்பொழுது த்ரிசங்கு யாரைக் குருவாக அடுத்தான்? அவர் என்ன செய்தார்? அதில் என்ன ப்ரமாதம் விளைந்தது?

விடை.—த்ரிசங்கு தபஸ் செய்துகொண்டிருந்த விச்வாமித்ரரிடம் சொல்ல, அவர் அவனை, வஸிஷ்டரிடமிருந்த விரோதத்தால், யாகம் செய்துவைத்துத் தேஹத்தோடு ஸ்வர்க்கத்திற்கு அனுப்புவதாக ஒப்புக்கொண்டார். உடனே தமது ஸிஷ்யர்களிடம் ஸகல ப்ராஹ்மணர்களையும் இந்த யாகத்திற்கு அழைத்துவரும்படி சொல்லி அனுப்பினர். அநேக ப்ராஹ்மணர்கள் வந்து கூடினர்கள். அப்பொழுது வஸிஷ்டர் பிள்ளைகள் மாத்திரம் வாராமல், 'எஜமானன் சண்டாளன்! யாகம் செய்துவைப்பவன் க்ஷத்ரியன்! இது என்ன யாகம்?' என்று பரிஹாஸமாய்ப் பேசினர்கள். இதனால் விச்வாமித்ரருக்கு அதிகக் கோபம் வர, வஸிஷ்டர் பிள்ளைகள் உடனே இறக்க வேண்டும் என்றும், அவர்கள் பின்பு அநேக ஜன்மம் வரையில் நாய்மாம்ஸம் பக்ஷிக்கும் முஷ்டிகர் என்ற ஜாதியாய் அலைந்து திரியவேண்டும் என்ற கொடிய சாபத்தைக் கொடுத்தார்.

வின 50.—விச்வாமித்ரர் த்ரிசங்குவுக்காகச் செய்த யாகம் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை.—விச்வாமித்ரர் வந்தவர்களை வைத்துக் கொண்டு யாகத்தைத் தொடங்கி, ஹவிர்ப்பாகம் வாங்கத் தேவதைகளை அழைத்தார். ஒரு தேவதையும் வரவில்லை. உடனே நெய் எடுக்கும் அகப்பையில் த்ரிசங்குவை ஏற்றித் தமது தபோபலத்தால் அவனை ஸ்வர்க்கம் நோக்கி அனுப்பினர். த்ரிசங்கு ஸ்வர்க்கம் அடைந்ததும், இந்த்ரன் 'நீ இங்கு வர யோக்யன் அல்லன்' என்று சொல்லிக்கொண்டு அவனைத் தலை கீழாகத் தள்ளிவிட்டான்.

வினு 51.—தலைகீழாக வந்த த்ரிசங்குவின் கதி என்னவாயிற்று? விச்வாமித்ரர் பின்பு என்ன செய்தார்?

விடை.—தலைகீழாக வந்த த்ரிசங்குவை ஆகாயத்திலேயே நிறுத்தி அங்கு விச்வாமித்ரர் தமது தபோ மஹிமையால் ஒரு புதிய ஸ்வர்க்கம் ச்ருஷ்டித்து அவனை அங்கு ஸுகமாய் இருக்கும்படி செய்தார். இது முடிந்ததும், தமது தபஸ் முழுவதும் வீணாய்ச் செலவானது கண்டு, தெற்குத் திக்கைவிட்டு மேற்குத்திக்கை அடைந்து, புஷ்கர தீர்த்தத்தின் கரையில் மறுபடி ப்ராஹ்மண்யத்தை யடைய தபஸ் செய்யத்தொடங்கினர்.

வினு 52.—இங்கு இவர் தபஸால் என்ன உபகாரம் செய்தார்?

விடை.—ரிசீகருக்கும், தமது தமக்கையாகிய ஸத்யவதிக்கும் பிறந்த இரண்டாம் பிள்ளையாகிய சுநச்சேபன் என்பவனை, அயோத்யா நகரத்தரசனுகிய அம்பரீஷ சக்ரவர்த்தி நரபசு யாகத்தில் வெட்டி ஹோமஞ் செய்ய, ரிசீகரிடமிருந்து வாங்கிக்கொண்டு வரும்

வழியில் புஷ்கர தீர்த்தத்தில் வந்து இறங்கினன். அங்குத் தனது மாமனாகிய விச்வாமித்ரரைக் கண்டதும் சுநச்சேபனுக்கு அடங்காத் துக்கம்வர, தான் நரபசுவாகி உயிரிழக்கப்போகிற கஷ்டத்தை அவரிடம் சொல்லிக்கொண்டான். தமது பிள்ளைகளுள் ஒருவனை விச்வாமித்ரர் சுநச்சேபனுக்குப் பதிலாக நரபசுவாகப் போகச் சொன்னார். அவர்கள் இசையாதது கண்டு, வஸிஷ்டர் பிள்ளைகளைச் சபித்ததுபோலத் தன் பிள்ளையையும் சபித்துவிட்டு, உடனே அவர் தமது தபோபலத்தால் இந்த்ர ஸ்தோத்ரம் ஒன்றை சுநச்சேபனுக்கு உபதேசித்தார். இதை சுநச்சேபன் மாமன் உத்தரவின்படி தன்னை வெட்டும் ஸமயத்தில் உச்சரிக்க, இந்த்ரன் அக்நி முதலிய தேவதைகள் 'யாகத்தால் த்ருப்தி அடைந்தோம்' என்று சொல்லிவிட்டார்கள். உடனே ராஜன் சுநச்சேபனை வெட்டாது விட்டுவிட்டான். இவ்வாறு விச்வாமித்ரர் தமது தபோ மஹிமையால் ஒருவன் உயிரைக் காப்பாற்றினார்.

வின 53.—சுநச்சேபனை மாத்ரம் ரிசீகர் அம்பரீஷருக்குக் கொடுப்பானேன்?

விடை.—ரிசீகருக்கு மூன்று பிள்ளைகள். அம்பரீஷர் வந்து நரபசு வேண்டும் என்று கேட்ட காலத்தில், ரிசீகர் தம் மூத்த பிள்ளையாகிய ஜமதக்நியைக் கொடுக்கமாட்டோம் என்று சொன்னார். தாயாகிய ஸத்யவதீ தேவி, தான் கடைசிப்பிள்ளையாகிய சுநகனைக் கொடுக்கமாட்டேன் என்றாள். தனக்கு ஆதரவு யாருமில்லை என்றறிந்து, இரண்டாம் பிள்ளையாகிய சுநச்

சேபன் அம்பரீஷரோடு நரபசுவாக வருவதாய்த் தானே ஒப்புக்கொண்டான்.

வினு 54.—இங்கு விச்வாமித்ரருக்கு என்ன விக்நம் நேர்ந்தது? பின்பு விச்வாமித்ரர் என்ன செய்தார்?

விடை.—இங்கு விச்வாமித்ரர் தபஸ் செய்து கொண்டிருக்கையில் இந்த்ரனுல் இவரது தபஸைக் கலைக்க அனுப்பப்பட்ட மேநகை என்ற அப்ஸரஸ்த்ரீ அந்தப் புஷ்கர தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்துகொண்டிருந்தாள். இதை விச்வாமித்ரர் கண்டவுடன், அவருக்கு ஆசை உண்டாய் விட்டது. மேநகையோடு அந்தக் காட்டிலேயே நாள்போவது தெரியாமலே, பத்து வருஷம் தபஸைக் கவனியாதிருந்துவிட்டார். அப்பொழுது மேநகையிடம் இவருக்குச் சகுந்தலை என்ற பெண் உண்டானுள். பெண் பிறந்ததும் இவருக்குத் தபஸ் கெட்டுப்போனது ஞாபகம் வந்துவிட்டது. உடனே மேநகையை உதறித்தள்ளிவிட்டு வடக்கிலுள்ள மலைகளில் விச்வாமித்ரர் தபஸ் செய்யச் சென்றார். அங்கு ப்ரஹ்மா ப்ரத்யக்ஷமாகி, 'ப்ராஹ்மண்யம் வேண்டுமானுல், இந்த்ரிய ஜயம், காமக்ரோதாதிகளின் ஜயம் அதிகமாய் வேண்டும். கொடிய தவம் செய்' என்று கட்டளையிட்டு மறைந்தார். விச்வாமித்ரர் கொடிய தவம் புரியத்தொடங்கினுர்.

வினு 55.—இவர் தவத்திற்கு என்னதடை ஏற்பட்டது? பின்பு இவர் என்ன செய்தார்?

விடை.—இந்த்ரனுல் ஏவப்பட்டு ரம்பை என்ற அப்ஸரஸ்த்ரீ, மன்மதனுல் பின் தொடரப்பட்டு, விச்வாமித்ரரது தபஸைக் கெடுக்கவந்தாள். அப்பொ

மூது அகாலத்தில் வஸந்தகாலம் உண்டாயிற்று. புஷ்பங்கள் புஷ்பித்தன. கோகிலாதி பக்ஷிகள் சப்தித்தன. இப்படி இருந்தும், இவைகளால் விச்வாமித்ரரது தபஸைக் கலைக்க முடியவில்லை. ஆனால் ரம்பையைக் கண்டதும் விச்வாமித்ரருக்குக் கோபம் வர, அவளைக் கல்லாய்ப் போகக்கடவாய் என்று சபித்தார். இந்தக் கோபத்தால் அவருக்குத் தபஸும் குறைந்தது. மன்மதன் முதலியோர் பயந்து ஓடிப்போயினர்.

வின 56.—கோபத்தால் தபஸ் குறைய விச்வாமித்ரர் என்ன செய்தார்? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—விச்வாமித்ரர் கோபத்தையும் அடக்குவதாகத் தீர்மானித்துக்கொண்டு, கிழக்குத் திக்கை நோக்கிச்சென்று தவம் செய்தார். தவத்தின் முடிவில் ப்ராஹ்மதேவர் ப்ரத்யக்ஷமாகி, இவரை 'வாராய் ப்ராஹ்மரிஷியே' என்றழைத்தார். அப்பொழுது இவர் இதை வஸிஷ்டரும் அங்கீகரிக்க வேண்டுமென, ப்ராஹ்மாவின் உத்தரவின்படி வஸிஷ்டரும் அங்கு வந்து, விச்வாமித்ரரை ப்ராஹ்மரிஷி என்று ஒத்துக்கொண்டார். அன்று முதல் விச்வாமித்ரருக்கு ப்ராஹ்மண்யம் வந்தது.

வின 57.—இந்த விச்வாமித்ர சரித்ரத்தைச் சதாநந்தர் சொல்லி முடித்ததும், ராமலக்ஷ்மணர் என்ன செய்தார்கள்? பின்பு என்ன நடந்தது?

விடை.—இந்தச் சரித்ரம் முடிந்ததும், ஸூர்யாஸ்தமன ஸமயம் வந்தபடியால், ராமலக்ஷ்மணர் மாலைக் கடனை விதிப்படி முடித்துக்கொண்டு, தமக்காக விடப்பட்ட விடுதி சென்று, ஸுகமாய் இரவைக்

கழித்தனர். மறுநாட் காலையில் விச்வாமித்ரருடன் இவர்கள் ஜநகஸபைக்கு வந்தார்கள். விச்வாமித்ரர் ஜநகரிடம் ராமர் சிவதநுஸைப் பார்க்க இச்சிப்பதாகச் சொன்னார். உடனே சிவதநுஸை ஸபைக்குக் கொண்டுவர ஆள்களை அனுப்பிவிட்டு சிவதநுஸின் விசேஷத்தை ராமலக்ஷ்மணர்களுக்கு ஜநகர் சொன்னார்.

வினா 58.—சிவதநுஸைப்பற்றிய விசேஷமென்ன? இதை ஜநகர் யாது காரணம்பற்றித் தம்மிடம் வைத்திருந்தார்?

விடை.—முன் காலத்தில் தக்ஷப்ரஜாபதி அருத்ர யாகம் செய்யுங்கால் அதையழிக்க எண்ணிச் சிவபிரான் தமது சிவதநுஸை எடுத்து நாண்பூட்டி அட்டஹாஸம் செய்தார். அப்பொழுது அங்கு வந்திருந்த தேவதைகள் யாவரும் பயந்து, சிவபிரானைச் சரணமடைந்தனர். சிவபிரான் மகிழ்ந்து, இவர்களிடம் தமது தநுஸைக் கொடுத்து வைத்திருந்தார். தேவதைகள், ஜநகரது மூதாதைகளுள் ஒருவராகிய தேவராதரிடம் அந்தத் தநுஸைக் காப்பாற்றி வைத்திருக்கும்படி கொடுத்தார்கள். அதுமுதல் இந்தத் தநுஸ் ஜநகவம்சத்திலேயே இருந்துவிட்டது. இதை ஜநகர் தமது பெண்ணாகிய ஸீதைக்கு ஒரு கன்யாசுல்கம்போல வைத்து, இந்தச் சிவதநுஸை வளைத்து நாண்பூட்டும் வீரனுக்கே தமது ஸீதையைக் கொடுப்பதாகத் தீர்மானம் செய்திருந்தார். இதற்காக ஜநகர் இந்தச் சிவதநுஸை வெகு ஜாக்ரதையாய்ப் பாதுகாத்து வந்தார்.

வினா 59.—ஸீதை யார்? இவளைத்தவிர ஜநகருக்கு வேறு பெண்கள் உண்டா?

விடை.—ஒரு யாகத்திற்காகச் சுத்தமான ஒரு பூமியை ஜநகர் தங்கக் கலப்பையால் உழும்பொழுது அங்குப் படைச்சாலில் கண்டு எடுக்கப்பட்டவள் ஸீதை. இவளை அன்று முதல் ஜநகர் தமது பெண் போல வளர்த்து வந்தார். இவள் மஹாலக்ஷ்மியின் அவதாரம். மஹாவிஷ்ணு ராமராக அவதரிக்க, அவருக்கு ஸஹாயமாக மஹாலக்ஷ்மி ஸீதையாகப் படைச்சாலில் தோன்றினள். ஆகவே ஸீதை மநுஷ்யர் வயிற்றில் பிறந்த ஸாதாரணப் பெண் அல்லள். ஜநகருக்கு ஊர்மிளை என்ற வேறு ஒரு பெண்ணும் இருந்தாள்.

வினா 60.—ஸீதையை அடைவதற்குச் சிவதநுவை வளைத்தல் என்பதை ஒரு பரீக்ஷையாக வைத்ததால், ஜநகருக்கு என்ன கஷ்டங்கள் உண்டாயின?

விடை.—அநேக அரசர் ஸீதையின் அழகைக் கேள்விப்பட்டுவர, அவர்களிடம் சிவதநுஸின் விஷயத்தை ஜநகர் சொன்னார். அவர்களால் சிவதநுவை அசைக்கக்கூட முடியவில்லை. இவ்வாறு தோல்வியடைந்த எல்லா அரசர்களும் சேர்ந்து, மிதிலா நகரத்தை வளைத்துக்கொண்டு போர்புரியத் தொடங்கினர். பின்பு தேவதைகளின் ஸஹாயத்தால் ஜநகர் இவர்களை வென்று ஸுகமடைந்தார்.

வினா 61.—சிவதநுஸ் எவ்வாறு ஸபைக்குக் கொண்டு வரப்பட்டது? உடனே ராமர் என்ன செய்தார்?

விடை.—அநேக சக்ரங்களையுடைய வண்டியில் வைக்கப்பட்டு, அநேக ஆயிரம் பேர்களால் வெகு கஷ்டத்தோடு இழுக்கப்பட்டு, சிவதநுஸ் ஜநகஸபைக்குக்

கொண்டுவரப்பட்டது. உடனே ராமர் தநுவின் பெட்டியைத் திறந்து அந்தத் தநுஸை அலக்ஷ்யமாய் நடுப் பாகத்தை பிடித்துத் தூக்கினர். அதன் கனத்தாலேயே அது வளைந்து கொடுக்க, வெகு லேசாய் அதை வளைத்து நாண்பூட்டத் தொடங்கினர். கொஞ்ச நாழிகையில் தநுஸ் நடுவில் ஒடிந்தது. அப்பொழுது ஒரு பெரிய சப்தம் உண்டாயிற்று. அதனால் ஸகல லோகங்களும் நடுங்கிவிட்டன.

வினு 62.—இதைக்கண்ட ஜநகர், மேல் என்ன செய்தார்? பிறகு என்ன நடந்தது?

விடை.—ராமருக்கு ஸீதையைக் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, ராமர் தகப்பனுரான தசரதருக்குத் தூதர் மூலமாய் மிதிலையில் நடந்த விசேஷங்களை ஜநகர் சொல்லி அனுப்பினர். இதைக் கேட்டதும் தசரதர் தமது பந்துக்கள் பரிவாரங்களோடு மிதிலை வந்து சேர்ந்தார் அதற்குள் ஜநகர் தமது தம்பியாயும், ஸாங்காச்ய தேசத்தரசனுயும் உள்ள குசத்வஜ ராஜனை, மிதிலைக்கு வரவழைத்துவிட்டார்.

வினு 63.—இவர்கள் வந்து கூடியதும், மிதிலையில் என்ன நடந்தது ?

விடை.—இவர்கள் வந்ததும் கல்யாணத்திற்குப் பூர்வாங்கமான ஹோமாதிகள் நடந்தன. அதில் வஸிஷ்டர் தசரதரது வம்சாவளியையும், சதாநந்தர் ஜநகரது வம்சாவளியையும், விஸ்தாரமாய் எடுத்துரைத்தனர். (இதன் விவரத்தை இப்புத்தகத்தின் முடிவிலிருக்கும் வம்சாவளியில் காண்க). இதன் பின்பு ஜநகர் தம் பெண் ஸீதையை ராமருக்கும், ஊர்

பிளையை லக்ஷ்மணருக்கும் கொடுப்பதாக ஸபையில் வாக்களித்தார். உடனே வஸிஷ்டர் பரதசத்ருக்நர்களுக்குக் குசத்வஜனது பெண்கள் இருவரையும் கொடுத்துவிடும்படி ஜநகரைக் கேட்டார். அவ்வாறே செய்வதாக ஜநகர் வெகு ஸந்தோஷமாக ஒப்புக்கொண்டார்.

வி௵.64.—இங்கே இவ்வாறிருக்கையில் கல்யாணத்திற்குப் புதிதாய் யார் வந்தார்? பின்பு என்ன நடந்தது?

விடை.—கேகய தேசாதிபதியின் பிள்ளையும், பரதனுக்கு நேர் மாமனுமான யுதாஜித் என்பவன், அயோத்யையில் தசரதர் முதலியோரைக் காணவந்தவிடத்தில் கல்யாண ஸங்கதி அறிந்துகொண்டு, மிதிலா நகரம் வந்து சேர்ந்தான் இவனைக் கண்டதும் தசரதர் தகுந்த மரியாதை செய்தார். இதன் பின்பு விதிப்படி அக்நி ஸாக்ஷியாய் ராமருக்கு ஸீதையையும், லக்ஷ்மணருக்கு ஊர்மிளையையும், பரதருக்கு மாண்டவியையும், சத்ருக்நருக்கு ச்ருதகீர்த்தியையும், ஜநகர் கன்னிகாதானம் செய்ய, விவாஹ மஹோத்ஸவம் வெகு கோலாஹலமாய் நடந்தது. மறுநாள் காலையில் விச்வாமித்ரர் ஹிமாலயத்தை நோக்கிச் சென்றனர். தசரதர் முதலியோரும் புதிதாய் வந்த பெண்களோடு அயோத்யை நோக்கிப் புறப்பட்டனர்.

வி௵ 65.—வழியில் என்னவிபரீதம் ஸம்பவித்தது?

விடை.—அயோத்யை நோக்கி இவர்கள் போய்க்கொண்டிருக்கும்பொழுது, க்ஷத்ரிய குலத்தை இரு

பத்தோர்தரம் வேரறுத்துத் தமது தகப்பனுக்குத் தர்ப்பணம் செய்தவரும், விஷ்ணுவினது அம்சாவதாரமுமாகிய பரசுராமர், விஷ்ணுதநுஸைக் கையில் எடுத்துக்கொண்டு ராமர் எதிரே வந்து நின்றார். இவர் வந்ததும், தசரதர் முதலிய ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களுக்கு, ராமருக்குப் பெரிய அபாயம் வந்துவிட்டது என்று தோன்ற, அவர்கள் யாவரும் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தனர். அப்பொழுது ராமரும் வஸிஷ்டரும் மாத்ரம் தைர்யமாய் நின்றனர்.

வினு 66.—வந்த பரசுராமர் ராமரை என்ன கேட்டார்? ராமர் என்ன செய்தார்?

விடை.—ராமர் சிவதநுஸை ஒடித்த ஸங்கதியைக் கேள்வியுற்றுத் தாம் வந்ததாகவும், தம்மிடம் மேலான விஷ்ணு தநுஸ் இருக்கின்றது என்றும், அதை நாண்பூட்டி அம்பை வைத்தால், பின்பு தான் யுத்தத்திற்கு வருவதாகவும், பரசுராமர் சொன்னார். உடனே ராமர் பரசுராமரது வலிமையை அடக்கி விஷ்ணு தநுஸை வளைத்து நாண்பூட்டி அம்பைத் தொடுத்துக்கொண்டு பரசுராமரை உற்று நோக்கினார்.

வினு 67.—அப்பொழுது என்ன விசித்ரம் நடந்தது? பரசுராமர் என்னசெய்தார்?


விடை.—அப்பொழுது பரசுராமரிடமிருந்த விஷ்ணுகலை, ராமரிடம்வந்து சேர, பரசுராமருக்கு வலிமை குறைந்து போயிற்று. உடனே பரசுராமர் வெட்கமடைந்து, தமது யோகமஹிமை யாவையும் ராம பாணத்திற்கு இரையாகக் கொடுத்துவிட்டு மஹேந்த்ர மலைக்குத் தபஸுக்குச் சென்றனர்.

வின 68.—பரசுராமர் போனதும் என்ன நடந்தது ?

விடை.—அரசன் முதலியோருக்கு மூர்ச்சை தெளிந்தது. எல்லோரும் மிகுந்த ஸந்தோஷத்தோடு அயோத்யா நகரம் வந்து சேர்ந்தனர். அங்கு ராமர் முதலியோரது கல்யாண மஹோத்ஸவத்தை அயோத்யா நகரவாஸிகள் வெகுவாகக் கொண்டாடினார்கள்.

வின 69.—இவ்வாறு அயோத்யா நகரம் சென்று யாவரும் அமர்ந்ததும், தசரதர் யுதாஜித்தை எவ்வாறு ஊருக்கு அனுப்பினார் ?

விடை.—தசரதர் யுதாஜித்திற்குத் தகுந்த மரியாதைகள்செய்து ஊருக்கு அனுப்ப யத்தனிக்கையில், யுதாஜித்து தன்னுடன் பரதனை அனுப்பினால் நலமாயிருக்கும் என்று சொன்னான். அதன்படியே தசரதர் பரதனையும் அவனுக்கு ஸஹாயமாகச் சத்ருக்னனையும், யுதாஜித்துடன் கேகயதேசம் போய்வரும்படி அனுப்பினார்.



[illegible] கல்யாணம்.



குஹன் ராமர் முதலியோருக்கு ஓடம் விடுதல்.

2. அயோத்யா காண்டம்

வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ்சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோற்றுறந்து
கானுங்கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் காத்த கழல்வேந்தை.

வினா 1.—பரத சத்ருக்நர்களைக் கேகயதேசம் அனுப்புவித்த பின்பு, தசரதருக்கு என்ன எண்ணம் தோன்றிற்று? இந்த விஷயத்தில் ஸபையில் என்ன தீர்மானம் ஏற்பட்டது?

விடை —ஸ்ரீராமர் ஸகலகுண ஸம்பூர்ணராய் வளர்ந்துவருங்கால், தசரதருக்கு ராஜ்யத்தை ராமர்வசம் ஒப்புவித்துவிட்டு, அவர் ராஜ்யம் ஆளும்சிறப்பைத் தாம் கண்ணாரக்கண்டு, ஆநந்திக்கவேண்டும் என்ற எண்ணமுண்டாயிற்று. இதைத் தசரதர், ஸபையிலிருப்பவர் அறியும்படி வெளியிட்டார். எல்லோரும் இதை அங்கீகரித்தனர். உடனே கூடிய சீக்ரத்தில் மறுநாளே, ஸ்ரீராமருக்குத் தான் ராஜ்யபட்டாபிஷேக மஹோத்ஸவத்தை நடத்துவதாகத் தீர்மானித்தார்.

வினா 2.—இவ்வாறு தீர்மானம் செய்ததும், இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் என்ன தசரதர் செய்தார்? ஜநங்கள் என்ன ஏற்பாடுகள் செய்தார்கள்?

விடை.—தசரதர் முதலில் வஸிஷ்டரைப் பட்டாபிஷேகத்திற்கு வேண்டியவைகளை ஸித்தம் செய்யும்படி மஹா விநயத்துடன் ஏவினார். இதன் பின்பு ஸு

மந்த்ரர் என்ற தமது ஸாரதி மூலமாய் ராமரைத் தம் மிடம் அழைப்பித்து, அவரிடம் வெகு அன்போடு தமது எண்ணத்தைத் தசரதர் வெளியிட்டு, மறுநாட் காலையில் அவருக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போகிறதாகச் சொன்னார். ராமர் இதைக்கேட்டு வெகு ஸந்தோஷத்தோடு தமது இருப்பிடம் சென்றார். உடனே தசரதர் வஸிஷ்டரை ராமரிடம் அனுப்பி மறுநாள் நடக்கவேண்டிய காரியங்களுக்கு ராமரும் ஸீதையும் அன்றிரவு உபவாஸாதிகளைச் செய்யும்படி ஏற்பாடு செய்தார். இதற்குள் ஜனங்கள் அன்றிரவே வெகு சீக்ரத்தில் பட்டணத்தை அலங்கரிக்கத் தொடங்கினர். அயோத்திமாநகரில் அன்றிரவில் ஜனங்கள் உறங்காது கூட்டங்கூட்டமாய் மறுநாள் நடக்கப்போகிற பட்டாபிஷேக ஸங்கதியைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

வினு 3.—இவ்வாறு எல்லாம் வெகு சிறப்பாய்ப் பட்டாபிஷேகத்திற்காகத் தயாராகுங்கால், தசரதர் மனம் எவ்வாறிருந்தது ? ஏன் ?

விடை.—தசரதர் மனதில் அப்பொழுது ஏதோ ஒரு ஸங்கடம் ஏற்பட்டது. அவர் ஏதோ சில அபசகுனங்களைக் கண்டார். அதனால் அந்தப் பட்டாபிஷேகத்திற்கு ஏதாவது விக்நம் வருமோ என்று ஏங்கினார். இவ்வாறு தசரதர் மிகுந்த கஷ்டத்தை அடைந்திருந்தார்.

வினு 4.—இதற்குத் தக்கபடி ராமபட்டாபிஷேகத்திற்கு என்ன தடை ஏற்பட்டது ? எவ்வாறு ?

விடை.—இவ்வளவு மனவருத்தத்தோடு இருந்

தும் அதைப்பாராட்டாது தசரதர், தமது இளையமனைவியாகிய கைகேயியிடம் சென்று ராம பட்டாபிஷேகத்தைப்பற்றிச் சொல்லவேண்டும் என்று வெகு ஆவலோடு போனார். அவளுக்கு இந்த விஷயம் தெரியாது என்று தசரதர் எண்ணியிருந்தார். அங்கு சென்ற உடன் கைகேயி வெகு கோபத்தோடு தரையில் படுத்திருப்பதைக் கண்டார். அவளை ஸமாதானப்படுத்த யத்தனிக்கையில், அவள் தனது இஷ்டப்படி தன் காரியத்தை முடித்துக்கொடுக்கவேண்டும் என்று அரசனிடம் கேட்க, அவர் தன் அருமைப்பிள்ளை ராமன் பேரில் ஸத்யம் வைத்து, அவ்வாறே முடித்துத் தருவதாக உறுதிமொழி கூறினார். இதைக் கேட்டவுடன் கைகேயி கொஞ்சமேனும் கூசாது, தன் பிள்ளை பரதனுக்குச் சீக்ரத்தில் அயோத்யையில் பட்டாபிஷேகம் செய்துவிடவேண்டுமென்றும், ;அவனுக்கு ஒரு குறைவும் வராதிருப்பதற்காக ராமன் 14 வருஷம் வநவாஸம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள்.

வினா 5.—தசரதனை வேறு' எந்த விதத்தால் கைகேயி தான் கோரியவாறு அவச்யம்செய்யும்படி கட்டாயப்படுத்தினாள் ?

விடை.—தசரதருக்கு' இந்த ஸமாசாரம் மிகுந்த துக்கத்தை விளைவிக்குங்கால், கொடியவளான கைகேயி, முன் அவர் செய்திருந்த வேறு ஒரு வாக்குத்தத்தத்தை தசரதருக்கு ஞாபகப்படுத்திவிட்டாள். முன் காலத்தில் சம்பாராஸுரன் என்ற ஒருவன் இந்திரனை எதிர்த்துப் போர்புரிந்தான். அப்பொழுது தசரதர், இந்த்ரனுக்கு ஸஹாயமாய் அவனோடு வெகு கோர

யுத்தம் செய்தார். அதில் தசரதா யுத்தகளத்தில் மூர்ச்சையாய்விழ, அப்பொழுது கூடவந்திருந்த கைகேயி, ரதத்தை யுத்தகளத்திலிருந்து ஒதுக்கிக் கொண்டுபோய் அரசனை ஆச்வாஸப்படுத்தினாள். இம் மாதிரி நல்ல தருணத்தில தன் மனைவியிடம் அரசனுக்கு மிருந்த ஸந்தோஷம் வர, அவளை ஏதாவது இரண்டு வரங்களைக்கேட்டு வாங்கிக்கொள்ளும்படி ஏவினார். கைகேயி தனக்கு அப்பொழுது வரங்கள் ஒன்றும் வேண்டாம் என்பதாகவும், அவைகளைத் தனக்கு வேண்டுங்கால் அவரைக்கேட்டு வாங்கிக்கொள்ளுவதாகவும, அரசனிடம் சொல்லியிருந்தாள். இந்த ஸமாசாரத்தையும் அரசனுக்கு இந்த ஸமயத்தில் கைகேயி ஞாபகப்படுத்தி. அரசனைத் தன் இஷ்டப்படி தன் இரண்டு வரங்களையும் தந்தே திரவேண்டுமென்று கட்டாயப்படுத்தினாள்.

வின 6.—இதுவரையில் ராமனிடம் வெகு அன்பாய் இருந்த கைகேயிக்கு இந்தத் துர் எண்ணம் இந்தச் சுபஸமயத்தில் எப்படி வந்தது?

விடை.—கைகேயிக்குக் கூனி என்ற ஒருதாதி இருந்தாள். அவள் அன்று ஸாயங்காலம் அயோத்யை கோலாஹலமாய் இருப்பது கண்டு, ஸமாசாரத்தை அங்கு கௌஸல்யையின் தாதியிடமிருந்து தெரிந்து கொண்டாள். உடனே எப்படியாவது ராமபட்டாபிஷேகத்தை நிறுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணம் இவளுக்குண்டாயிற்று. இந்தத் துர் எண்ணத்துடன் கைகேயியிடம் வந்து, அவளது மனதை மாற்றி அவளை மிகக்கொடியவளாகச் செய்துவிட்டாள்

வினா 7.—கூனி எவ்வாறு கைகேயியின நல்ல எண்ணத்தை மாற்றினாள்?

விடை.—கைகேயி ஸுகமாய்ப் படுத்திருந்த அந்தப்புரத்திற்குக் கூனி சென்று, முதலில் தனது துர்எண்ணத்தை வெளியிடுவதற்காகத் தன் முகத்தைச் சுளித்துக்கொண்டு, ஏதோ மிகுந்த கஷ்டப்படுவதுபோல, கைகேயி முன்வந்து நின்றாள். அவள், 'உனக்கு என்ன கஷ்டம்' என்று கேட்க கூனி, 'உனக்கு மிகுந்த அபாயம் வந்துவிட்டது. ராமனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் நாளை ஆகப்போகிறதாம், உன் பரதனுக்கு ஒன்றுமில்லையே' என்றாள். இதைக் கேட்டதும் மிக ஸந்தோஷப்பட்டுக் கைகேயி 'ராமனுக்கும் என் பரதனுக்கும வித்யாஸமே இல்லை என்று நான் எண்ணி இருக்கிறேன். நீ நல்ல ஸமாசாரம் என்னிடம் சொன்னாய்' என்று தனது ஸந்தோஷத்தை வெளியிட்டாள். பின்பு கூனி, தசரதர் ராமனுக்குப் பட்டங் கட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் பரத சத்ருக்னர்களை வெளியே அனுப்பிவிட்டார் என்றும், ராமன் பரதனைக் கவனிக்கமாட்டான் என்றும், பலவாறாக எடுத்துச்சொன்னாள். அப்பொழுதும் கைகேயி, ராமனே ராஜ்யபாளத்தக்க குணமுடையவன் என்றும், ராமன் ஒருகாலும் பரதனைக் கஷ்டப்படுத்தமாட்டான் என்றும் சொல்லி, ராமனது குணததை நிரம்ப ச்லாகித்துப் பேசினாள். மெதுவாகக் கூனி, முன்பு கைகேயிக்கும் கௌஸல்யைக்கும் இருந்த சக்களத்திச் சண்டையை ஞாபகப்படுத்தி 'ராமனுக்குப் பட்டாபிஷேகமாய்விட்டால், கௌஸல்யை, உன்னை மிகக் கஷ்டப்படுத்துவாள்'

என்று சொன்னாள். இதைக் கேட்டதும், கைகேயி மனம் கொஞ்சம் சலித்தது. இதுதான் தருணம் என்று கூனி, கௌஸல்யை ராமன் தசரதர் முதலியோரைத் தூஷிக்க, கைகேயி 'பரதனுக்கு இத்தருணத்தில் எவ்வாறு ராஜ்யத்தை வாங்கிக்கொடுப்பது' என, கூனி, 'அரசன் இன்றிரவு உன்னிடம் வரும்பொழுது வெகு கோபமாய் இருந்து அவரிடமிருந்து, அடி கைகேயி! நீ காரியத்தை ஸாதித்துக்கொள்ளலாம். மேலும் சம்பராஸுர யுத்தத்தில் உனக்குக் கொடுத்திருந்த வரத்தின் பலத்தாலும் உன் காரியத்தை ஸாதித்துக்கொள்ளலாம்' என்று உபாயம் சொல்லிக் கொடுத்தாள். அதன்படியே கல்நெஞ்சமுள்ள கைகேயியும் பின் வருவதை யோசிக்காது, அரசன் வந்தவுடன் தன் வரங்களைக் கேட்டாள்.

வினா 8.—இவ்வாறு கைகேயி கேட்டதும் அரசன் என்ன செய்தான்? எல்லாம் எவ்வாறு கடைசியில் முடிந்தது?

விடை.—இந்த அப்ரிய வார்த்தையைக் கேட்டதும், தசரதர் மூர்ச்சையடைந்து விழுந்துவிட்டார். பின்பு துக்கம் மேலிட்டு எவ்வளவோ கைகேயியை அவர் நயந்தும், வைதும் பார்த்தார். அப்பொழுதும் கைகேயி, தான் கேட்ட வரங்களைக் கொடுத்தே தீரவேண்டும் என்று பிடிவாதமாய் இருந்தாள். பின்பு அரசன் ராமனைப்பிரிந்து தன்னால் இருக்கமுடியாதென்றும், பரதனே, ராமர் அடையவேண்டிய ராஜ்யத்தைத் தான் வாங்கிக்கொள்ளத் துணியான் என்றும், எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். கைகேயி மனங்

கரையவில்லை. அரசன் அதன் பின்பு ராமன் காட்டிற்குப்போனால், தான் உயிர் இழக்கும்படி வரும் என்றும், அவ்வாறு உயிரிழக்குங்கால், கைகேயி எண்ணப்படி பரதன் இருப்பானாயின், அவன் தனக்குக் கர்மம் செய்யக்கூடாது என்றும், கைகேயியைத் தான் த்யாகம் செய்துவிட்டதாகவும், அநேகவிதமான கொடிய வார்த்தைகளைக் கோபத்தோடும் மனவருத்தத்தோடும் சொல்லிப்பார்த்தார். அப்பொழுதும் கைகேயி அரசனைப் பொய்யன் என்றும், முன் தாராளமாய்க் கொடுத்த வரத்தை ஸமயம் வருங்கால் கொடுக்க யோசிக்கும் துராத்மா என்றும் பழித்தாளே ஒழிய, அரசன் மனவருத்தத்தைக் கொஞ்சமேனும் கவனிக்கவில்லை. இவ்வாறு இரவு முழுவதும், தர்க்கத்திலும் துக்கத்திலும் கழிய, தசரதருக்கு ராமனைக் காட்டிற்கு அனுப்பவேண்டியது அவச்யந்தான் என்று தோன்றிற்று. இந்த எண்ணம் தோன்றத் தோன்ற, தனக்குச் சீக்ரம் மரணம் வந்து விடுமென்றும் அரசனுக்குத் தோன்றியது. ராமனிடம் இந்த விஷயத்தை எவ்வாறு வாய்விட்டுச் சொல்வது, பட்டாபிஷேகத்திற்கு வந்திருக்கும் ஜனங்களுக்கும் அரசருக்கும் என்ன பதில் சொல்வது என்ற ஏக்கமுண்டாக, பொழுதுவிடிந்ததுகூடத் தெரியாமல், அரசன், கைகேயி அந்தஃபுரத்தில்லேயே தலைகவிழ்த்து ஒரு படுக்கையில் மிகுந்த துக்கத்தோடு படுத்திருந்தார்.

வினா 9.—பொழுது விடிந்ததும் முதலில் அயோத்யையில் என்ன நடந்தது?

விடை.—பொழுது விடிந்ததும், இரவெல்லாம் ராமபட்டாபிஷேகத்தைப்பற்றிப்பேசி மிகுந்த ஆவலுடன் ஸூர்யோதயத்தை எதிர்பார்த்திருந்த ஜநங்கள் யாவரும், தசரதர் ஸபை வாசலில் வந்துகூடினார்கள். அப்பொழுது வஸிஷ்டரும் பட்டாபிஷேக த்ரவ்யங்களைச் சேகரித்துக்கொண்டு அங்கு வந்து நின்றார். ராமருக்குச் சற்று நாழிகைக்குள் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதென்று, ஜநங்கள் யாவரும் மிகுந்த ஸந்தோஷத்துடன் இருந்தனர். வஸிஷ்டர் ஸூர்யன் உதயமாய்க் கொஞ்ச நாழிகையாயும், தசரதர் ஸபைக்கு வாரதது கண்டு, ஸுமந்த்ரர் என்ற ஸாரதியை அந்தஃபுரம் அனுப்ப, அவர் அரசனது ஹீநஸ்திதியைக் கண்டார். அப்போது கைகேயி ராமனைச் சீக்ரம் அழைத்து வரும்படி ஸுமந்த்ரரை ஏவினாள். அப்பொழுது அரசனும் ஏக்கம் பிடித்துத் தனது முகத்தை உயர்த்தி, 'ராமனைக் கூட்டிக்கொண்டுவா' என்று பெருமூச்செறிந்து சொன்னார். இவைகளை எல்லாம் கண்ட ஸுமந்த்ரர், அரசனுக்கு ஏதோ துக்கம் வந்திருக்கின்றது என்றும், அது ஒருவேளை ராமனைக் கண்டால் தீர்ந்து விடும் என்றும் எண்ணி ராமனை அழைக்கச் சென்றார்.

வின 10.—ஸுமந்த்ரர் அழைக்கப்போன காலத்தில் ராமர் எவ்வாறு இருந்தார்? அவர் எவ்வாறு புறப்பட்டு வந்தார்?

விடை.— முதல் நாள் உபவாஸம் யாவும் தீர்ந்து காலையில் எழுந்து ஸ்நாநாதிகள் செய்து, ஸகலவித